மின்னிதழ்

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

E Paper

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

2024 மார்ச் 2 சனிக்கிழமை

வரு. 91 இல. 54 | Saturday 02, March, 2024 | 09 பக்கங்கள் | 50/-

## ஆசிரியர் தாக்கியதில் 03 மாணவர்கள் காயம்

பாதுக்க பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் மாணவர்களை ஆசிரியர் ஒருவர் தடியொன்றால் தாக்கியதில் 03 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று மாணவர்கள் உட்பட 07 மாணவர்கள் பாடசாலையின் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றிருந்த வேளை வகுப்பாசிரியர் இவர்களை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

06

ஊழியர்களின் சம்பளம் அதிகரிப்பு

## விளக்கம் கோருவதற்கு மத்திய வங்கி அதிகாரிகளுக்கு அழைப்பு



ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தமை குறித்து விளக்கம் கோருவதற்காக மத்திய வங்கியின் அதிகாரிகள் எதிர்வரும் 05ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (01) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

மார்ச் மாத விலை சூத்திரத்துக்கமைய

## எரிபொருள், சமையல் எரிவாயு விலைகளில் திருத்தம் கிடையாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சமையல் எரிவாயு விலைகளில் எந்தவித மாற்றமும் கிடையாது என்றும் தற்போது நடைமுறையில் உள்ள விலைக்கே இந்த மாதம் முழுவதும் சமையல் எரிவாயு விற்பனை செய்யப்படும் என்றும் லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

06

## 05ஆம் திகதி முதல் 07ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடும்

### 05ஆம் திகதி கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைப்பு



பாராளுமன்றம் எதிர்வரும் 05ஆம் திகதி முதல் 07ஆம் திகதி வரைகூடவுள்ளது. எதிர்வரும் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொது விடுமுறை என்பதால் அன்றையதினம் பாராளுமன்றம் கூடாது.

இதற்கமைய மார்ச் 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பதுடன், மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

06

இந்துசமுத்திரத்துக்குள் நாட்டின்

## பொருளாதார திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்பட இடமளியோம்

### திருகோணமலை கடற்படை முகாம் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு



இலங்கையின் கடல் பிராந்தியத்தையும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்துசமுத்திரத்தில் நாட்டின் பொருளாதாரத் திட்டங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த இடமளியோம் என்றும் சூளுரைத்தார்.

1967 இஸ்ரேல் அரபு யுத்தத்தின் போது சுயஸ் கால்வாய் மூடப்பட்டதன் காரணமாக 10 வருடங்களாக கொழும்பு துறைமுகத்தின்

06

நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவில்

# மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கட்டமைப்புக்கு இந்தியா உதவி

### 10.995 மில். அமெரிக்க டொலர் ஒப்பந்தம் நேற்று கைச்சாத்து



### 2025ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் திட்டத்தை நிறைவு செய்ய உத்தேசம்

நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவில் மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் 10.995 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு மானியமாக வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது. இலங்கையில் இந்தியா மேற்கொண்டுள்ள முக்கிய திட்டங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

இதன்படி நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவிலேயே இந்த மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டம்

06

அரசாங்கத்தின் 02 தொழிற்சாலைகளுடாக

## தேயிலை தொழில்துறையினருக்கு குறைந்த விலையில் உர விநியோகம்



அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உரத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் உயர் தரத்திலான தேயிலைக்கான உரம், சந்தை விலையை விட குறைவாக தேயிலை தொழில்துறையினருக்கு வழங்கப்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

தேயிலைக்கு பயன்படுத்தப்படும் T200, T750, U709, U 834, T 65 உள்ளிட்ட உரங்களின் விலை கடந்த காலங்களில் பெருமளவில் அதிகரித்திருந்தது. ஆனால், அந்த விலையை எம்மால் ஓரளவு குறைக்க முடிந்தது. தற்போது மேலும் விலையை குறைக்க எதிர்பார்க்கிறோம். எனவே, அரசாங்கத்திற்கு சொந்தமான கொமர்ஷல் , சிலோன் உரத் தொழிற்சாலைகளில் மேற்படி உர வகைகளை உற்பத்திச் செய்ய எதிர்பார்த்திருக்கிறோம்.

அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உரத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் உயர்தர தேயிலை உரத்தை

06

மியன்மாரில் சிக்கியுள்ள

## இலங்கையரை மீட்பதற்கு மகஜரூடாக நடவடிக்கை



மியன்மாரில் சிக்கியுள்ள இலங்கையரை மீட்குமாறு கோரி மகஜரொன்று மியன்மாருக்கு அனுப்பி வைக்கப்படுமென பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள மகாநாயக்க தேரர்களால் மியன்மார் மகாநாயக்க தேரர்களுக்கு இந்த மகஜர் அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். மகஜரின்படி, மியன்மார் மகாநாயக்க தேரரின் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண மியன்மார் அரசாங்கம் தலையிடுமென்று எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து ஹரிகரன் தன்வந்த் சாதனை படைப்பு



திருகோணமலை இந்துக் கல்லூரியின் 13 வயது மாணவன் ஹரிகரன் தன்வந்த், தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் வரையான பாக்குநீரிணையை கடந்து சாதனை படைத்துள்ளார். தன்வந்த் புதிய

06

லேக் ஹவுஸ் முன்னாள் தலைவர்

## லூஷன் ராஜகருணாநாயக்க நேற்று காலமானார்



மூத்த ஊடகவியலாளரும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான லூஷன் ராஜகருணாநாயக்க நேற்று காலமானார்.

பல வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பத்திரிகைகளுக்கு செய்தி சேகரிப்பு, கட்டுரை, செவ்விதாக்கம் என இதழியலின் அனைத்து அம்சங்களிலும் 50 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் அனுபவம் கொண்ட அன்னாரின் இழப்பு பத்திரிகைத்துறைக்கு பேரிழப்பாகும்.

06

தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு

## அமைச்சர் ஜீவன் பிறந்ததின வாழ்த்து





மலையக மறுமலர்ச்சிக்கான பயணத்தின் போது, இங்கு வாழும் தொப்புள்கொடி உறவுகளுக்கு தமிழக அரசாங்கம் தனது முழுமையான ஒத்துழைப்பை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வழங்குமென்று உறுதியாக நம்புவதாக, இ.தொ.கா. வின் பொதுச் செயலாளரும்

06

எல்ல ரயில் நிலையம் அருகே

## ரயில் மோதி இளைஞர் பலி

எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்ல ரயில் நிலையத்துக்கருகில் ரயில் மோதி 23 வயது இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் (29) உயிரிழந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹாலி எல பிரதேசத்தை சேர்ந்த 23 வயது இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் பதுளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கட்டுநாயக்காவூடாக

## சாந்தனின் பூதவுடல் கொண்டு வரப்பட்டது

**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது**




இந்தியாவின் சென்னை அரச மருத்துவமனையில் உயிரிழந்த சாந்தனின் பூதவுடல் ஸ்ரீலங்கா ஏயார் லைன்ஸ் விமானம் மூலம் நேற்று இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. அவரது சடலம் நேற்று முற்பகல் 11.35 மணியளவில் இந்தியாவின் சென்னையிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL122 இல் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டது.

06

காத்தான்குடி வீடொன்றில் இரகசிய ஒன்றுகூடல்

## பிணையில் வந்த சஹ்ரானின் உறவினர் 04 பேர் உட்பட 30 பேர் மீண்டும் கைது

### அதிகாலை 02 மணிக்கு பொலிஸ் அதிரடி சுற்றிவளைப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஸஹ்ரான் ஹாசிமினுடைய சாகோதரியின் கணவர் மற்றும் 04 பேர் உட்பட 30 பேரை சந்தேகத்தின் பேரில் நேற்று (01) அதிகாலை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியில் வீடொன்றில் சட்டவிரோதமாக ஒன்றுகூடி கூட்டமொன்றை நடத்தியதாக குறிப்பிட்டே இவர்கள் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனை

06

## மாணவர்களின் புத்தகப்பை சுமையை குறைக்க நடவடிக்கை

### கல்வி அமைச்சு சுற்றுநிருபம் வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாடசாலை மாணவர்களின் அன்றாட புத்தகச் சுமையை குறைப்பதற்கு கல்வி அமைச்சு புதிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது. அந்த வகையில்

06

அமெரிக்க தூதரகம் ஏற்பாடு செய்துள்ள

## இளைஞர் மன்ற தலைமைத்துவ மாநாடு 04 ஆம் திகதி ஆரம்பம்



இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் இளைஞர் மன்ற தலைமைத்துவ உச்சி மாநாடு எதிர்வரும் 04ஆம் திகதி முதல் 07ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் இந்த மாநாட்டில் பல்வேறு பின்னணிகளைக் கொண்ட 100க்கும் மேற்பட்ட இளம் தலைவர்கள் ஒன்றுகூடவுள்ளனர்.

அமெரிக்கத் தூதரகத்தினால் நடத்தப்படும் இந்த மாநாடு, இளைஞர்களின் ஈடுபாடு, தலைமைத்துவப் பண்பு ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு

06

# யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் தரித்து நிற்கும் பஸ்களால் சுகாதார பாதிப்புகள்

## மருத்துவ பீட பீடாதிபதி டொக்டர் சுரேந்திர குமார்

*(யாழ். விசேட நிருபர்)*



யாழ். போதனா வைத்தியசாலை சூழலில் தரித்து நிற்கும் பஸ்களால் நோயாளிகளின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதாக மருத்துவ பீட பீடாதிபதி வைத்திய கலாநிதி சுரேந்திர குமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச தரத்திலான மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு நெரிசலற்ற அமைதியான சூழல் யாழ். போதனா வைத்தியசாலை சூழலில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குறித்த சேவைகளை முன்னெடுப்பதற்கு எமக்கு சவாலாக இருப்பது நீண்ட தூரம் தரித்து நிற்கும் பஸ்கள். நாம் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

வைத்தியசாலையின் புதிய கட்டடத்தொகுதிக்கு முன்பாக தரித்து நிற்கும் பஸ்கள், எமது மருத்துவ சேவைகளை முன்னெடுப்பதற்கும் நோயாளிகளின் ஆரோக்கியம் தொடர்பிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அதனால் யாழ்.மாநகரசபை, மாவட்டச்செயலகம், ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து யாழ்ப்பாண ஆரோக்கிய நகரம் எனும் திட்டத்தை உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளோம். குறித்த திட்டத்தை மேற்கொள்வதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கை பணியாளர்களும் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள பணியாளர்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வருகை தரவுள்ளனர்.

எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் யாழ்ப்பாண நகரை ஆரோக்கிய நகரமாக மாற்றுவதற்கான வேலைத் திட்டங்களை அவர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே எதிர்காலத்திலும் அது நகரத்தை ஆரோக்கியமாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பதற்கு வாகன நெரிசல் ஒரு இடையூறாக காணப்படுகிறது. எனவே இதற்கு காரணமாகவுள்ள போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தி நகரத்தை தூய்மையாக பேணுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் தரிந்து நின்று சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களை அவ்விடத்தில் தரித்து நிற்கக்கூடாது என கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான கூட்டமொன்றில் தீர்மானம் எடுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டதையடுத்து, தனியார் பஸ் உரிமையாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கி வைப்பு

*(ஓமந்தை விஷேட நிருபர்)*




புதுக்குடியிருப்பில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 55 பயனாளிகளுக்கு நேற்றையதினம் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 55 பயனாளிகளுக்கு ஜேர்மன் வாழ் தமிழ் மக்களின் நிதி பங்களிப்பில் தலா 10,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு மேல்மருத்தூர் ஆதிபராசக்தி மண்டபத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திலகநாதன் கிந்துஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன், உயிரிழை அமைப்பின் தலைவர் கு.கோணேசன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்தனர்.

# சட்டவிரோதமாக மரக்குற்றிகளை கடத்திய நபர் கைது

*(சாவகச்சேரி விசேட நிருபர்)*



சாவகச்சேரிப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட நுணாவில் வைரவர் கோவில் பகுதியில் நேற்று பிற்பகல் சட்டவிரோதமாக உழவு இயந்திரத்தில் எடுத்துச் செல்லப்பட்ட மரக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான இலுப்பை மரக் குற்றிகள் மற்றும் வேப்பமரக் குற்றிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன் உழவு இயந்திரத்துடன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மரதன் ஓட்ட போட்டியாளருக்கு உதவ சென்ற மாணவன் விபத்தில் பலி

*(கரவெட்டி தினகரன் நிருபர்)*

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மீசாலை பகுதியில், நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார்.

க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும் பரணீதரன் (வயது 18) எனும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பாடசாலையொன்றில் நடைபெற்ற மரதன் ஓட்ட போட்டியில் கலந்து கொண்ட மாணவனுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் அருகில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த மாணவனை காரைநகரிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த மாணவனை மீட்டு, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸார், பஸ் சாரதியை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

# தலைமன்னார் சிறுமியின் கொலை வழக்கு பெற்றோர் உட்பட பலரிடம் வாக்குமூலம்

*(தலைமன்னார் விசேட நிருபர்)*



தலைமன்னார் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் மாணவியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிபதி கே.எல்.எம்.சாஜித் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டு மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.


இவ்வழக்கில் இறந்த மாணவியின் பெற்றோர், உறவினர் மற்றும் சம்பவம் அன்று பிள்ளையின் நடமாட்டத்தை நேரில் கண்கண்ட சாட்சி என ஐந்து பேர் நீதிமன்றில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கை பார்ப்பதற்காக நீதிமன்றின் சூழல் தலைமன்னார் ஊர்மனை மக்களால் நிரம்பிக் காணப்பட்டது.




# கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து சடலம் மீட்பு

*(தலவாக்கலை குறூப் நிருபர்)*



தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று (1) மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். தலவாக்கலை ஹொலிரூட் தோட்டத்தைச் சேர்ந்த கசுன் லக்மால் (வயது 25) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தலவாக்கலை பகுதியில் மரண வீடொன்றுக்கு சென்று நான்கு நாட்களாக வீடு திரும்பாமையால் பெற்றோர் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த நுவரெலியா நீதவான் பரிசோதனைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



வாசிப்பு ஒரு மனிதனை முழு மனிதனாக்கும்" எனும் தொனியில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் (கண்டி) காரியாலயத்தின் ஊடாக நுவரெலியா மாநகரசபை பொது நூலகத்தில் "இந்தியன் கோனர்" எனும் நூலகப் பகுதி (29) உத்தியோகப்பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# மத்திய மலைநாட்டில் கடும் வெப்பம்; நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவு

*(மஸ்கெலியா தினகரன் நிருபர்)*

மத்திய மலைநாட்டில் கடுமையான வெப்பம் நிலவுவதால் நீர்த்தேக்க பகுதிகளிலுள்ள அனைத்து நீர்த்தேக்கங்களினதும் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

குறிப்பாக மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 20 அடி குறைந்துள்ளது. அதேபோல் காசல் ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட 10 அடி குறைந்துள்ளது.

மேல் கொத்மலை கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, கலுகல, விமலசுரேந்திர, நவலக்சபான, மேல் கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் வெகுவாக குறைந்துள்ளது.

தொடர்ந்து இப்பகுதியில் கடுமையான வெப்பம் நிலவுவதால் சகல நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மேலும் குறையுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட பகுதிகளில் பாரியளவில் சுத்தமான குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# முச்சக்கர வண்டியிலிருந்து தவறி விழுந்த கைக்குழந்தை

*(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)*

முச்சக்கரவண்டியொன்றில் பயணித்துக் கொண்டிருந்த தாயையும் அறியாமல் அவரின் மடியிலிருந்த ஒரு மாத குழந்தையொன்று வீதியில் நழுவி விழுந்த சம்பவமொன்று கித்துல்கல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு முச்சக்கரவண்டிகளில் சிவனொளிபாதமலைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கித்துல்கல பொலிஸார் தெரிவித்தனர். குடும்பத்தின் தந்தை, தாய் மற்றும் மூன்று பிள்ளைகளுடன் ஒரு மாதக்குழந்தையொன்றும் பயணித்துள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருக்கும் போது தாயின் மடியிலிருந்த ஒரு மாத குழந்தை தவறி வீதியில் விழுந்துள்ளமை நீண்ட தூரம் பயணித்த பின்னரே தாய்க்கு தெரியவந்துள்ளது.

குழந்தை காணாமல் போனதை தொடர்ந்து பதற்றமடைந்த பெற்றோர் வந்த வழியே மீண்டும் குழந்தையைத் தேடி சென்றுள்ளனர். இதன்போது அவ்வழியாக மோட்டார் கார் ஒன்றில் வந்த சாரதி குழந்தையை மீட்டு பொலிஸார் ஊடாக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக தெரியவருகின்றது.

இதனையடுத்துப் பெற்றோர் கித்துல்கல வைத்தியசாலைக்கு விரைந்துள்ளனர். இங்கு சிகிச்சை வழங்குவதற்கான வசதிகள் இல்லாமையால் குழந்தை கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலதிக விசாரணைகளை கித்துல்கல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




ஹங்குராங்கெத்த கல்வி வலயத்துக்குட்பட்ட ஹேவாஹேட்ட நுல்கந்தூர தமிழ் வித்தியாலயத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டு திறப்பு விழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

# மயக்க மருந்து கொடுத்து தங்கநகைகள் திருடிய பெண் கைது

புதுவருடத்தை கொண்டாடுவதற்காக நுவரெலியாவுக்கு அழைத்து வந்த நபரிடமிருந்து தங்க நகைகள் மற்றும் விலை உயர்ந்த தொலைபேசி இரண்டை திருடிய பெண் ஒருவர் நுவரெலியா பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸாரால் அப்பெண்ணிடமிருந்து 32 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியான தங்க நகைகள், ஸ்மார்ட் தொலைபேசி ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணை கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் நுவரெலியா, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்ற நீதிபதி பிரபுதிகா லங்கான்தினி உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மாலெபே பிரதேசத்தை சேர்ந்த 45 வயது மதிக்கத்தக்க பெண் கொழும்பைச் சேர்ந்த செல்வந்தருடன் நட்பை வளர்த்து அவரை 2024 புது வருடத்தை கொண்டாடுவதற்காக நுவரெலியாவிற்கு அழைத்து வந்துள்ளார்.

இவ்வாறு வந்தவர்கள் விடுதியொன்றில் தங்கி புதுவருட வரவை மகிழ்ச்சியாக அனுபவித்துள்ளனர்.

இதன்போது அப்பெண் அழைத்து வந்த நபருக்கு உணவு மற்றும் மதுபானத்தில் மயக்க மருந்தை கலந்து கொடுத்துள்ளார்.

பின்னர் அவரிடமிருந்து 32 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியான தங்க நகைகள் மற்றும் விலை உயர்ந்த ஸ்மார்ட் போன்கள் இரண்டை திருடிக்கொண்டு தலைமறைவாகியுள்ளார். இதுதொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# மறே தோட்டத்தில் காட்டுத் தீ

*(மஸ்கெலியா நிருபர்)*

நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள மறே தோட்ட நூக்குவத்தை பிரிவில் காட்டு தீ பரவி வருகிறது.

நூக்குவத்தை பிரிவில் பயிரிடப்பட்ட டேப்பன் டைன் வனத்தில் நேற்று காலை 10 மணிக்கு இனந்தெரியாத நபர்கள் வைத்த தீயில் தற்போது சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் தீ பரவியுள்ளது.

# 'கண்ணீரை துடைப்போம்' திட்டத்துக்கு தாய்லாந்து குழு 50,000 USD அன்பளிப்பு

கொழும்பு கங்காராம விகாராதிபதி கலாநிதி வண. கிரிந்தே அஸ்ஸஜி தேரர் மற்றும் தாய்லாந்து பௌத்த குழுவினர் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் (29) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து 50,000 அமெரிக்க டொலரை அன்பளிப்புச் செய்தனர்.

இந்த அன்பளிப்புத் தொகையை மிகவும் வறிய மக்களுக்கு உதவுவதற்காக ஜனாதிபதி நிதியம் முன்னெடுத்துள்ள 'கண்ணீரைத் துடைப்போம்' வேலைத்திட்டத்துக்கு பயன்படுத்துமாறு ஜனாதிபதி, தனது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்தக் குழு இலங்கையின் நலன்புரிச் செயற்பாடுகளுக்காக மூன்றாவது முறையாக இவ்வாறான அன்பளிப்பை வழங்கியுள்ளதோடு, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மேற்படிக் குழுவினால் கொழும்பு கங்காராமயவுக்கு வழங்கப்பட்ட 2,00,000 அமெரிக்க டொலர் நாடளாவிய ரீதியிலுள்ள 1,800 பௌத்த விகாரைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.



## தவக்கால சிந்தனை



### சுயநலமும் – மன்னிப்பும்

உலகளவில் மிகவும் பிரபல்யமான பரிசுத்த வேதாகமத்தின் ஊதாரி மைந்தன் உவமையானது இளைய மகன், இரக்கமுள்ள தந்தை, மூத்த மகன் ஆகிய குடும்ப உறுப்பினர்களைக் குறித்த கதையாகும்.

இளைய மகன் சுயநலமும் முதிர்ச்சியற்றவனுமாகும். அவன் அன்புமிக்க தன் தந்தையை மதியாதவன். சொத்தில் தனக்குரிய பகுதியினைக் கேட்கிறான், ஆயினும் அவ்வாறு கேட்பதற்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. ஏனெனில் அவனது தந்தை இன்னும் இறக்கவில்லை. எந்தவொரு குடும்பத்திலும், பண்பாட்டிலும் இதுவொரு பாரதூரமான குற்றமாகும்.இரக்கமுள்ள தந்தை அவனுக்குரிய சொத்தைக் கொடுக்கிறார். இளைய மகன் அவற்றைக் கொண்டு சென்று, ஒழுங்கீனமாகவும், தாறுமாறாகவும் செலவு செய்கிறான். எல்லாச் சொத்தையும் அவன் அழித்த பின்னர் பன்றிகள் உண்ணும் உணவால் தன் வயிற்றை நிரப்பும் நிலை வருகிறது.

அப்போதுதான் அவன் வீட்டிற்கு திரும்பிப்போக முடிவு செய்கிறான். அவனது தந்தையோ அவரது இளைய மகனின் வருகைக்காக ஒவ்வொரு நாளும் காத்திருக்கிறார். அவன் திரும்பி வருவதைக் கண்டபோது, அவனை நோக்கி ஓடி, கட்டித்தழுவி, முத்தமிட்டு அவனுக்கென பெருவிருந்துப் படையல் ஏற்பாடு செய்கிறார், ஏனெனில் "காணமற் போயிருந்தவன் திரும்பி வந்துவிட்டான், இறந்து போனவன் வாழ்வுக்கு திரும்பி வந்துவிட்டான்." என்கிறார்.

மூத்த சகோதரன் அந்த விருந்தினைக் குறித்து கேள்விப்பட்டு கோபமடைகிறான். அவன் கடுஞ்சினம்,பொறாமை, எரிச்சல் கொண்டு தன் தம்பியை ஏற்றுக்கொள்ள மறுத்து தந்தையிடம், "உமது மகன்" என அவனை விளிக்கின்றான். தந்தையோ, அவனிடம் அவன் "உனது சகோதரன்" என்று நினைவுபடுத்தி, அவனை மன்னிக்க வேண்டும், மற்றும் திரும்பி வந்தமைக்காக விழாக் கொண்டாட வேண்டுமென்கிறார்.

அந்த வகையில் நீங்களும் நானும் ஊதாரி மைந்தனைப் போன்றவர்கள்தான். காரணம், நாம் எல்லோரும் பாவிகள்.நாம் மன்னிக்கப்பட வேண்டியவர்கள். பெருந்தன்மையும், மன்னிக்கும் மன்னிப்பாங்கும், புரிந்துகொள்தல். மற்றும் இரக்கமும் அன்புமுள்ள விண்ணகத் தந்தையுடன் நாம் நமது வாழ்வினை இணைக்க முடியும்.

மூத்த சகோதரனைப் போன்று கடுஞ்சினம், பொறாமை, கோபம் கொண்டு வாழ்வினைத் தொலைத்து இளைய சகோதரனை ஏற்க மறுத்தது போன்று தவறாக வாழாதிருப்போம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கிய பயணம்

# புள்ளிவிபர முறைமை நவீனமயமாக்கலுக்கு ஐ.நா. சனத்தொகை நிதியம் தொடர் உதவி

டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கிய பயணத்துக்காக புள்ளிவிபர முறைமையை நவீனமயப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் உதவி வழங்க முன்வந்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் (United Nations Population Fund) ஆசிய பசுபிக் பணிப்பாளர் பியோ ஸ்மித்துக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (29) அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன் போதேஇந்தஇணக்கப்பாடுஎட்டப்பட்டுள்ளது.



கடந்த ஐம்பது வருடங்களில் இலங்கையின் புள்ளிவிபர முறைமையை நவீனமயப்படுத்தல் மற்றும் சனத்தொகை தரவு முறைமையை மேம்படுத்தும் திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் வழங்கிய ஆதரவுக்கு பிரதமர் இதன்போது நன்றி தெரிவித்தார். டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கிய பயணத்துக்கு தரவு முறைமைகளை மேம்படுத்துவதற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பிராந்திய பணிப்பாளர் உறுதியளித்தார். பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் உரிமைகளுக்கு ஆதரவான திட்டங்களுக்கு உதவுவதற்கும் தேசிய அளவில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் அவர் விருப்பம் தெரிவித்தார். மேலும், அடிமட்டத்தில் சமூகங்களிடம் சென்று அவர்களின் தேவைகளை மதிப்பிடவும், அதற்கேற்ப ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பயனுள்ள ஆதரவிற்கான துறைகளை அடையாளம் காணவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நேற்றையதினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து அடிமட்டத்தில் உள்ள தேவைகளை இனங்கண்டு கொள்ள முயற்சித்ததாகவும் கிராமிய சமூகத்தின் பாரிய பிரச்சினையான பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளித்திருப்பதை பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார். பல பகுதிகளில் பெண்களுக்கு எதிரான வன்முறைப் பிரச்சினைகள் இருப்பதால், அந்த துறையில் விழிப்புணர்வு திட்டத்தை வலுப்படுத்த தமது அமைப்பு ஆதரவளிக்கும் என்றும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகைநிதியத்தின்பிராந்தியபணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியமானது சுகாதாரம், கல்வி மற்றும் பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதற்காக இலங்கை அரசாங்கம் மற்றும் நாடு முழுவதும் உள்ள பல்வேறு பங்குதாரர்களுடன் நீண்டகால ஒத்துழைப்புடன் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

குடும்பக் கட்டுப்பாடு, மகப்பேறு மற்றும் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கான சுகாதாரச் சேவைகள் உள்ளிட்ட விரிவான பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்த வழங்கப்படும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது என்று பிரதமர் கூறினார்.

தகவலறிந்த முடிவெடுப்பதற்கான அணுகக்கூடிய தகவல்கள் மற்றும் சேவைகளை உறுதிசெய்து இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான இலங்கையின் விரிவான அணுகுமுறைகளை ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பிராந்திய பணிப்பாளர் பாராட்டினார். ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா நாளை அனுஷ்டிக்கப்படுகிறது.

கிராமிய பிரதேசங்களில் விரிவான மகப்பேற்று மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்குவதற்காக நடமாடும் சுகாதார கிளினிக்குகளை நிறுவவும், நெருக்கடியன கால கட்டங்களின் போது அத்தியாவசிய பொருட்களை அணுகுவதை உறுதி செய்வதற்காக கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் கண்ணியத்தை பேணும் வகையில் மகப்பேற்று மற்றும் அத்தியாவசிய கருவித்தொகுதிகளை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் மேற்கொண்ட நடவடிக்கைகள் கிராமிய மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என பிரதமர் குறிப்பிட்டார்.

பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் இலங்கைப் பிரதிநிதி குன்லே அதெனியி மற்றும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதிய வேலைத்திட்ட நிபுணர் மது திஸாநாயக்க ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# வெருகல் மக்களுக்கு காணி உறுதிகள்



வெருகல் பிரதேச மக்களுக்கு கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வெருகல் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 280 பயனாளிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் அரசாங்க அதிபர், அரசாங்க அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.

# வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தற்காலிகமாக நேற்று நிறுத்தம்

பிரச்சினைகளை ஆராய குழு நியமனம்



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்திலிருந்து தூரப் பிரதேசங்களுக்கு போக்குவரத்து சேவையை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்கு வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸின் பணிப்புரைக்கமைய ஐவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேனவின் தலைமையில் நேற்று (01) இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து தூரப் பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கைக்கமைய நேற்று முன்தினம் வியாழக்கிழமை வடமாகாண ஆளுநர் செயலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினருடன் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணத்திலிருந்து தூர சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கைக்கமைய உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காக குழு நியமிக்கப்படுமென்று ஆளுநர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், உரிய விடயம் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளை ஒரு வாரத்துக்குள் ஆளுநருக்கு சமர்பிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.நியமிக்கப்பட்டுள்ள குழுவினர், யாழ். புதிய பஸ் நிலையத்திலிருந்து இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்களை இணைந்த நேர அட்டவணைக்கேற்ப தூர சேவைகளில் எவ்வாறு ஈடுபடுத்த முடியுமென்பது தொடர்பாக ஆராயவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையத்திலிருந்து தனியார் மற்றும் இ.போ. சபைக்கு சொந்தமான பஸ்கள் தூர சேவையை ஆரம்பிக்க வேண்டுமெனக் கோரி நேற்று முன்தினம் முற்பகல் யாழ். நகரில் ஆர்ப்பாட்டம் வலுப்பெற்றது. சம்பவ இடத்துக்கு விரைந்த ஆளுநர், தனியார் பஸ் உரிமையாளர் கோரிக்கை தொடர்பாக விசேட கலந்துரையாடலை நடத்தி தீர்வு பெற்றுத்தருவதாக கூறினார்.

அதற்கமைய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோருடன் கலந்துரையாடி இந்த பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் குழுவை நியமிக்க ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

ஆளுநரின் பணிப்புரைக்கமைய குறுகிய காலத்துக்குள் தமது கோரிக்கைக்கான தீர்வை எதிர்பார்ப்பதாக யாழ்ப்பாணத்திலிருந்து தூர சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்ததுடன், பணிபகிஷ்கரிப்பை கைவிட்டு வழமையான சேவைகளை முன்னெடுக்கவும் இணக்கம் தெரிவித்தனர்.

# 'Agri tech–24' கண்காட்சி இன்று ஹம்பாந்தோட்டையில் ஆரம்பம்

உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) 37ஆவது ஆசிய பசிபிக் மாநாட்டுக்கு இணையாக 'Agri tech24 Agricultural Technology Vision' கண்காட்சி இன்று (02) ஹம்பாந்தோட்டை விவசாய தொழில்நுட்ப பூங்காவில் நடைபெறுமென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) 37ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டுக்கு இணையாக 'Agri tech24 Agricultural Technology Vision' விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்அமைச்சின்கண்காணிப்பின்கீழ் கண்காட்சி ஹம்பாந்தோட்டை விவசாய தொழில்நுட்ப பூங்காவில் ஆரம்பமாவதுடன், மார்ச் 02, 03, 04, 05 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.




# பிஜி தீவின் கடற்றொழில் அமைச்சர் பாராளுமன்றத்துக்கு விஜயம்



கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கை வந்த பிஜி தீவின் கடற்றொழில், விவசாய அமைச்சர் Kalaveti Vodo Ravu கடந்த 21 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்தார்.

இதன்போது பிஜி அமைச்சர் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

எதிர்காலத்தில் விவசாயம் மற்றும் கடற்றொழில் துறைகளில் இரு நாடுகளுமிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்த எதிர்பார்ப்பதாக பிஜி அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களையும் பிஜி அமைச்சர் பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்தார்.

சிறப்பு விருந்தினர்கள் கலரியிலிருந்து பாராளுமன்ற விவாதத்தை பிஜி அமைச்சர் பார்வையிட்டதுடன், அவர் உள்ளிட்ட தூதுக் குழுவினரை கௌரவத்துடன் வரவேற்றதாக சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

முல்லைத்தீவு

# மேலதிக அரச அதிபர் கடமை பொறுப்பேற்பு



**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட (காணி) சி.ஜெயகாந்த் தனது கடமையை நேற்று பொறுப்பேற்றார்.

இவர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளராக கடமையாற்றி, தற்போது முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபராக (காணி) நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 19ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 20

### குறள் தரும் சிந்தனை



இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து

மாறுபாடு கொண்டு எதிர்ப்பதால் வெற்றி பெறுவது எளிது என எண்ணிச் செயல்படுபவரின் வாழ்க்கை விரைவில் தடம்புரண்டு கெட்டொழியும்.

# வடக்கையும் தெற்கையும் இணைக்கும் விமானப்படையின் 73வது ஆண்டு விழா

இலங்கை விமானப்படையின் 73வது ஆண்டு நிறைவு விழா இன்று (02ஆம் திகதி) ஆரம்பமாகிறது. இவ்விழாவின் பிரதான வைபவங்கள் யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்டு வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. பௌத்த சமய நிகழ்ச்சிகள் களனி ரஜமகா விகாரையில் நடைபெறவிருப்பதோடு ஏனைய சமய நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவ்விழாவையொட்டி கல்வி மற்றும் சமூக சேவை வேலைத்திட்டங்களும் வட மாகாணத்தில் விஷேடமாக ஏற்பாடு செய்யப்படடிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

விமானப்படை என்பது ஒரு நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கப் பங்காற்றும் முக்கிய பிரிவாகும். குறிப்பாக நாடொன்றின் ஆகாயப் பாதுகாப்புக்கு பொறுப்பான பிரிவினரே விமானப்படையினர். இவற்றைவிடவும் சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கும் விமானப்படைகள் பங்களிப்பது வழமை.

அந்த வகையில் இற்றைக்கு 73 வருடங்களுக்கு முன்னர் ரோயல் விமானப்படையாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை விமானப்படை 1972 இல் இலங்கை குடியரசானது முதல் இலங்கை விமானப் படை பெயர் மாற்றம் பெற்றது.

இந்நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதில் முன்னுரிமை அளித்து செயற்பட்டுவரும் இலங்கை விமானப்படை, நாட்டின் நிலைபேறான சமாதானத்திற்காக அளப்பரிய பங்களிப்பை நல்கி வருகின்றது. குறிப்பாக 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் சுமார் மூன்று தசாப்த காலம் நீடித்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவும் நாட்டில் அமைதி சமாதானத்தை ஏற்படுத்தவும் அளித்த பங்களிப்புக்கள் அளப்பரியதாகும்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்து வரும் இலங்கை விமானப்படை சமூக மேம்பாட்டு பணிளையும் முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் விமானப்படையினரின் இவ்வருட விழாவை வடக்கையும் தெற்கையும் இணைக்கும் வகையில் யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்டு வடமாகாணத்தில் நடாத்துகின்றனர்.

இவ்விழாவையொட்டி கல்வி அமைச்சின் சிபாரிசுகளுக்கு அமைய வட மாகாணத்திலுள்ள 73 பாடசாலைகளில் 100 மில்லியன் ரூபா அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. 'வடக்குக்கு என்னால் ஒரு புத்தகம்' என்ற வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ், ஆங்கில மொழிப் புத்தகங்களைப் பகிர்ந்தளிக்கவென 25 மில்லியன் ரூபாவையும் விமானப்படையினர் ஒதுக்கியுள்ளனர்.

மேலும் வட மாகாணத்திலுள்ள 5 மாட்டங்களிலும் அந்தந்தப் பகுதிகளுக்கு பொறுத்தமான மரக்கன்றுகளை நடவும் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்திற்கு கேஸ் டேர்பைன் இன்ஜின் ஒன்றும் விமானப்படையினரால் வழங்கப் படவிருக்கிறது.

அத்தோடு விமானப்படையினர் வருடா வருடம் ஏற்பாடு செய்யும் பைசிக்கிள் ஓட்டப்போட்டியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வடமாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு பாரிய ஏற்பாடுகளுடன் இன்று ஆரம்பமாகும் விமானப்படையினரின் 73 வது ஆண்டு விழா ஊடாக மக்களுக்கு விமானப்படை குறித்த அறிவூட்டலகள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.

இவ்விழாவின் நிமித்தம் வட மாகாணத்தில் பல்வேறு சமூக சேவைப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் யுத்த முடிவுக்கு வந்த பின்னரும் அப்பிரதேசங்களிலும் புனரமைப்பு மற்றும் சமூக சேவைப் பணிகள் பல விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

73 வது ஆண்டு விழாவின் பிரதான வைபவங்கள் வட மாகாணத்தில் இடம்பெறுகின்ற போதிலும் நாடெங்கிலுமுள்ள பிராந்திய மட்ட விமானப் படைத் தளங்களிலும் அணிவகுப்பு மரியாதை, விளையாட்டுப் போட்டிகள், மாகாணத்துடன் சம்பந்தப்பட்ட சமூக சேவைகள், இரத்தான முகாம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு பரந்தடிப்படையில் கவனம் செலுத்தி முன்னெடுக்கப்படும் இவ்விழாவை யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட மாகாண மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

இந்நிலையில் விமானப்படைத் தளபதி உதேனி பெரேரா, 'கடந்த காலங்களில் விமானப்படையின் ஆண்டு விழாக்கள் கொழும்புக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இம்முறை வடக்கையும் தெற்கையும் இணைக்கும் வகையில் யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்டு வட மாகாணத்தில் நடாத்தப்படுகிறது. இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம். அது அபிவிருத்திக்கு இன்றியமையாததது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றிணைந்து ஒற்றுமையாக செயற்படுவது இன்றியமையாததாகும். அது நாட்டினதும் மக்களினதும் சுபீட்சத்திற்கு வித்திட்டும். அந்த வகையில் இலங்கை விமானப்படையினர் மேற்கொண்டுள்ள இந்த ஏற்பாடுகள் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் நிச்சயம் ஏற்படுத்தும் எனலாம்.

editor.tkn@lakehouse.lk

# எடிசன் திரை விருதுகளில் சிறந்த இயக்குனர் யார்?

## பிடித்தமான இயக்குனர்களுக்கு இணையத்தில் வாக்களிக்க முடியும்









கடந்த ஆண்டு ரஜினி, விஜய், அஜித், ஷாருக்கான், தனுஷ், சிம்பு, விஷால் போன்ற நடிகர்களை வைத்து இயக்கிய இயக்குனர்கள் வரிசையில் மணிரத்தினம், லோகேஷ் கனகராஜ், வெற்றிமாறன், நெல்சன், திலிப்குமார், மாரி செல்வராஜ், அட்லி, கார்த்திக் சுப்புராஜ், வினோத்குமார் போன்ற இயக்குனர்கள் எடிசன் திரை விருது தேர்வுப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

பல்வேறு நாடுகளில் தினசரி நாளிதழ், பண்பலைகள், தொலைக்காட்சிகள், சமூக ஊடகங்கள் மூலம் வாக்கு பெற்று வரும் இயக்குனர்கள் வாக்கு நாளுக்கு நாள் போட்டிகள் அதிகமாக இருந்து வருகிறது.

மேலும் உலகத் தமிழர்கள் நற்சிந்தனையாளர்கள் மட்டுமல்லாமல், சிறந்த இயக்குனர்களை தேர்ந்தெடுப்பதில் வல்லவர்கள் என்பதில் எந்த ஒரு ஐயமில்லை என எடிசன் விருது குழு தெரிவித்துள்ளது.





தங்களுக்குப் பிடித்தமான இயக்குனர்களுக்கு இணையத்தில் வாக்களிக்க edisonawards.in என்ற இணையத்தில் வாக்குகளை செலுத்தலாம் என எடிசன் விருது குழுத் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

+60166167708 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

# கேலிச்சித்திரத்துறையில் இலங்கையில் தனக்கென தனியான முத்திரை பதித்தவர் 'சிரித்திரன்' சுந்தர்



நாற்பது வருடங்களுக்கு மேலாக கேலிச் சித்திரத்துறையில் தனது ஆளுமையைச் செலுத்திய சிரித்திரன் சுந்தர் பதினைந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட கேலிச்சித்திரங்களைத் தீட்டியுள்ளார். 'செய்தொழில் தெய்வம், சிரிப்பே சீவியம்' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு கலை இலக்கிய வானில் பறந்து திரிந்தவர் 'சிரித்திரன் சுந்தர்' என அழைக்கப்படும் சிவஞானசுந்தரம். மார்ச் 3, 1924 இல் பிறந்த அவர் மார்ச் 3, 1996இல் மறைந்தார்.

கேலிச்சித்திரங்கள், கட்டுரைகள் மற்றும் நடைச்சித்திரங்கள் என சிரித்திரனில் சுவைபட விடயதானங்கள் இடம்பெற்றன. சிரித்திரன் சுந்தரின் கேலிச்சித்திர நாயகர்களான சவாரித்தம்பர், சின்னக்குட்டி, மைனர் மச்சான், மயில்வாகனத்தார் போன்றவர்கள் வரலாற்றுப் புகழ்பெற்றவர்கள்.

'மகுடி பதில்கள்' என்னும் தலைப்பில் சுந்தர் எழுதிய கேள்வி பதில்கள் என்றும் புகழ்பெற்றவை.

'சிரித்திரன்' 1963ஆம் ஆண்டில் சி. சிவஞானசுந்தரம் அவர்களால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட நகைச்சுவை இதழ். அவரின் மறைவு வரை 32 ஆண்டு காலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது. சிரித்திரன் சஞ்சிகை மூலம் பல எழுத்தாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். வெறும் சிரிப்புச் சஞ்சிகையாக மட்டுமல்லாமல் சிரிப்புடன் சிந்தனையையும் தூண்டும் பல சிறந்த ஆக்கங்களைப் பிரசுரித்தவர் சுந்தர்.

சிந்தனைச் சிறப்பாலும், கேலிச் சித்திரங்கள், கருத்தோவியங்கள் போன்ற படைப்புக்களாலும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் சிரித்திரன் சஞ்சிகை தனியிடத்தைப் பெற்றது. அவரது படைப்புகள் மண்வாசனை உள்ளவையாகவும், பாத்திரங்கள் யாழ்ப்பாணப் பேச்சுவழக்குத் தமிழைச் சுவையாகப் பேசுபவையாகவும் விளங்கின.

தமிழ் மக்களிடையேயுள்ள சாதி வேறுபாடுகள் போன்ற பிற்போக்குத் தனங்கள், மூடக்கொள்கைகளை நகைச்சுவையாக – ஆனால், உறைப்பாகக் குத்திக்காட்டி நையாண்டிசெய்தார் சிரித்திரன் சுந்தர்.

சிரித்திரன் சுந்தர் கொழும்பு லேக்ஹவுஸ் நிறுவனத்தில் இருந்து வெளிவந்த தினகரனில் முதலில் கேலிச்சித்திரக்காரராக (Cartoonist) பணிபுரிந்தார். அக்காலத்தில் 'தினகரன்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்த க. கைலாசபதியின் அழைப்பை ஏற்று அப்பத்திரிகையில், சுந்தர் 'சவாரித்தம்பர்' என்ற தொடரை வரையத் தொடங்கினார். சவாரித்தம்பர் வாசகரிடையே அமோக வரவேற்பைப் பெற்றது. சவாரித்தம்பருக்காகத் தினகரனை வாங்கியோரும் பலர்.

சவாரித்தம்பர் என்பவர், அக்காலத்தில் கரவெட்டியில் வாழ்ந்து கொண்டிருந்த – முற்போக்கு எண்ணங்கொண்ட ஒரு பெரியார். வண்டிச் சவாரி செய்வதில் வல்லவர். சுந்தர் அவரோடு நன்கு பழகியவராக இருந்தார்.

அந்தக் கேலிச்சித்திரங்களை அவர் படித்து, "சிவஞானத்தின்ரை வேலை நல்லாயிருக்கு" என்று சொல்லிச் சிரித்து மகிழ்ந்தவராம். சவாரித்தம்பர் பாத்திரத்தைக் கண்ணியமான பாத்திரமாகவே சுந்தர் படைத்துவந்தார்.

அதில் வந்த சின்னக்குட்டி, பாறி மாமி பாத்திரங்களும் கரவெட்டியில் வாழ்ந்தவர்களே. தினகரன் வாரமஞ்சரியில் 'மைனர் மச்சான்', 'சித்திர கானம்' ஆகிய கேலிச்சித்திரத் தொடர்களையும் சுந்தர் வரைந்தார்.

சிரித்திரனை 1963 இல் ஆரம்பித்தார் சுந்தர். 1970 வரை கொழும்பு பண்டாரநாயக்க வீதி சுதந்திரன் அச்சகத்திலும், 1970 முதல் 1971 வரை டாம் வீதியில் குமரன் அச்சகத்திலும் அச்சஞ்சிகை அச்சிடப்பட்டது. 1971 முதல் யாழ்ப்பாணம் பிரவுண் வீதியில் ஸ்ரீலங்கா அச்சகத்தில் இருந்து வெளிவரத் தொடங்கியது.

1971 நவம்பர் முதல் சிரித்திரன் தனது சொந்த அச்சகத்தில் இருந்து வெளியாகியது. போர்க்கால சூழலில் 1995 இல் யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தபோது சிரித்திரன் இதழ் நிறுத்தப்பட்டது. அடுத்த ஆண்டே ஆசிரியர் சிவஞானசுந்தரம் மறைந்தார்.

மொத்தம் 32 ஆண்டு காலம் தொடர்ந்து சிரித்திரன் வெளிவந்தது. பல எழுத்தாளர்களையும் அறிமுகம் செய்த சிரித்திரன் புதுக்கவிதைகளையும் சிறுகதைகளையும் தொடர்கதைகளையும் வெளியிட்டது. சிரித்திரன் சஞ்சிகை மூலம் புகழ் பெற்ற பல எழுத்தாளர்கள் இன்று உலகில் பலர் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள்.

திக்குவல்லை கமால், திக்கவயல் தர்மகுலசிங்கம் (சுவைத்திரள் ஆசிரியர்), காசி ஆனந்தன், யாழ்நங்கை ஆகியோர் சிரித்திரனில் எழுதிய ஆரம்பகால எழுத்தாளர்கள். எஸ். அகஸ்தியர், டானியல் அன்ரனி, சுதாராஜ், அமிர்தகழியான், நவாலியூர் சச்சிதானந்தன், தெளிவத்தை ஜோசப் என பலருக்கு களம் அமைத்துக் கொடுத்தது சிரித்திரன்.

மலையகப் படைப்பாளி ராகுலனின் 'ஒய்யப்பங் கங்காணி', செங்கை ஆழியானின் 'ஆச்சி பயணம் போகிறாள்', 'கொத்தியின் காதல்' ஆகிய புகழ்பெற்ற படைப்புகள் சிரித்திரனால் வெளியிடப்பட்டன.

## நாளை அன்னாரின் நினைவுதினம்





அத்துடன் காசி ஆனந்தனின் 'மாத்திரைக் கதைகள்' பிரசித்தமானவை. குடாரப்பூர் சிவா 'நடுநிசி' என்ற மர்மக்கதையை எழுதினார். மாஸ்டர் சிவலிங்கத்தின் 'விண்ணுலகத்திலே' எனும் சிறுவர் கதை, அ. ந. கந்தசாமியின் கதைகள் போன்றவை சிரித்திரனால் வெளியிடப்பட்டன.

சிரித்திரன் நகைச்சுவைகளை மாத்திரம் தாங்கி வரவில்லை. தரமான சிறுகதைகள், குறுநாவல்கள், இலக்கியக் கட்டுரைகள், கலைஞர்களுடனான நேர்காணல்கள் முதலிய ஆக்கங்களும் அதனை அழகுசெய்தன. சிரித்திரன் நேர்காணல்கள் அடங்கிய நூலினை, 'தேன்பொழுது' என்ற பெயரில் சுந்தர் வெளியிட்டார். வேறு ஆக்கங்களும் பல நூலாக வெளியிடப்பட்டுள்ளன. 'சிரித்திரன் சித்திரக் கொத்து' என்ற கேலிச் சித்திரத் தொகுதியை, 1989 ஆம் ஆண்டு சுந்தர் வெளியிட்டார். 'மகுடி பதில்கள்', 'கார்ட்டூன் உலகில் நான்' ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன.

சிரித்திரன் இதழ் Centre for Creativity and Innovation நிறுவனத்தால் மீளவும் புதுப்பொலிவுடன் அச்சிலும், இணையத்திலும் பதிப்பிக்கப்பட்டு 2021 ஜனவரி முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து உலகெங்கும் கிடைக்க கூடிய வகையில் வெளியிடப்பட்டு வருகின்றது. siriththiran. com எனும் இணைய விலாசத்திலிருந்து தற்போது வெளிவருகிறது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# கல்முனை ஸாஹிராவில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் விழிப்புணர்வு நிகழ்ச்சி

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி உயர்தர மற்றும் மாணவர் தலைவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி அதிபர் எம்.ஐ ஜாபீர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன் போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள்,சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை, அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்மந்தமாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு அதிதியாக சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம். அப்துல் மலீக் கலந்து கொண்டார். இதில் பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளான இஷட்.எம் ஸாஜீத், எம்.எச்.எம். றிபாஜ் ஏ.பீ.எம் றிப்சாத் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)





# நேட்டோவில் ரஷ்யா இணைவதை அமெரிக்கா தடுத்ததா? பொறிஸ் ஜோன்சன் அமைதிப் பேச்சை எதிர்த்தாரா?

டக்கர் கார்ல்சனின் நேர்காணலில் புட்டின் பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். ரஷ்யா நேட்டோவில் இணைய அமெரிக்கா தடுத்தது என்றும், பிரிட்டன் பிரதமர் ஜோன்சன் அமைதிப் பேச்சுவார்த்தையை எதிர்த்தார் எனவும் புட்டின் தெரிவித்துள்ளார்.

2022 பெப்ரவரி 24இல் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து 2 ஆண்டுகளாக போர் தொடர்ந்து வருகிறது. உலகம் முழுவதும் பொருளாதார ரீதியாக பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி வரும் இந்தப் போரில், ரஷ்யா பல சவால்களைச் சந்தித்துள்ளது. பல சவால்களுக்கு மத்தியிலும், உக்ரைனின் பல முக்கிய இடங்களை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ளது.

உக்ரைனை பேச்சுவார்த்தைக்கு கொண்டு வர அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் வேண்டுகோள் விடுத்துள்ளார். வொக்ஸ் நியூஸ் பத்திரிகையாளர் டக்கர் கார்ல்சனுக்கு அளித்த பேட்டியில் புட்டின் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

உக்ரைனுடனான போர் தொடங்கி இரண்டு ஆண்டுகள் ஆகிறது. உக்ரைனில் உள்ள ரஷ்ய குடிமக்களைப் பாதுகாக்க போர் என்று அவர் கூறினார். உக்ரைன் நேட்டோவில் இணைவதைத் தடுக்க இந்தப் போர் அவசியம் என்றும் புட்டின் கூறினார்.

உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி தன்னுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பவில்லை என்று கூறிய புட்டின், அவரை பேச்சுவார்த்தைக்கு வர வைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். உக்ரைனுக்கு ஆயுத விநியோகம் நிறுத்தப்பட்டு, பேச்சுவார்த்தையை நோக்கி நாட்டை வழி நடத்த வேண்டும். உக்ரைனை ஆதரித்து ரஷ்யாவுக்கு தீங்கு செய்ய நினைக்கும் மேற்கத்திய நாடுகளின் திட்டம் ஒருபோதும் பலிக்காது என்றார் புட்டின்.

### மேற்கு நாடுகள் ரஷ்யாவை துண்டாட திட்டம்:

உக்ரைனுக்கு தொடர்ந்து ஆயுதங்களை வழங்குவதன் மூலம் மேற்கு நாடுகள் ரஷ்யாவை துண்டாட திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி புட்டின் குற்றம் சாட்டியுள்ளார்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு பாரிய அளவில் உதவி வருகின்றன.

அத்துடன் பல நாடுகள் ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்கியுள்ளன. ஐ.நா.வின் 193 உறுப்பினர்களைக் கொண்ட பொதுச்சபை ரஷ்யாவை பெருமளவில் தனிமைப்படுத்தியது.

இந்த நிலையில் நேட்டோ உறுப்பு நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்களை நன்கொடையாக வழங்கியுள்ளன. அவர்கள் பல்லாயிரக்கணக்கான டொலர்களை ஆயுதங்களாக அனுப்புகிறார்கள். இது உண்மையில் போரில் பங்கேற்பதாகும். இதன் மூலம் மேற்கு நாடுகள் ரஷ்யாவை துண்டாட திட்டமிட்டுள்ளன என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வழங்கிய நேர்காணலில் குற்றம் சாட்டியுள்ளார்.







### ரஷ்யா நேட்டோவில் இணைய அமெரிக்கா எதிர்ப்பு:



டக்கர் கார்ல்சனுக்கு அளித்த பேட்டியில் நீங்கள் நேட்டோவில் இணைந்திருப்பீர்களா எனக் கேட்ட போது, ரஷ்யா நேட்டோவில் இணைய அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்ததாகக் கூறி முந்திய வரலாற்றில் இருந்து பல உண்மைகளை தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனால் "அமெரிக்கா ஆம் என்று கூறியிருந்தால், நீங்கள் நேட்டோவில் இணைந்திருப்பீர்களா?" என்று டக்கர் கார்ல்சன் கேட்ட போது, அதற்கு புட்டின், "அவர்கள் ஆம் என்று கூறியிருந்தால், நல்லுறவு செயல்முறை தொடங்கியிருக்கும், இறுதியில் எங்கள் கூட்டாளர்களின் தரப்பில் சில நேர்மையான விருப்பத்தை நாம் கண்டிருந்தால் அது நடந்திருக்கலாம். ஆனால் அது நடக்கவில்லை" என்றார்.

"ஆனால் மேற்குலகம் உங்களை ஏன் மறுத்தது என்று நினைக்கிறீர்கள்? ஏன் விரோதம்? பனிப்போரின் முடிவு ஏன் உறவை சரிசெய்யவில்லை?" என டக்கர் கார்ல்சன் புட்டினிடம் கேட்ட போது, "ரஷ்யா மிகப் பெரிய நாடு, அதன் சொந்த கருத்து பல உள்ளது. மற்றும் நேட்டோவில் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பதை நான் பார்த்திருக்கிறேன். மேலும் நேட்டோ உறுப்பினர்கள் அனைவரும் அமெரிக்காவிற்கு கண்ணை மூடிக்கொண்டு கீழ்ப்படிதலுடன் வாழ்கிறார்கள். 2008 இல் உக்ரைனுடன் என்ன நடந்தது என்பதை சொல்கிறேன்" என புட்டின் பல வரலாற்றுத் தகவல்களை விளக்கினார்.

"ஈராக்கில் போர் நிகழ்ந்த போது, நாங்கள் அமெரிக்காவுடன் மிகவும் மென்மையாகவும், விவேகமாகவும், எச்சரிக்கையாகவும் உறவுகளை வளர்த்துக் கொண்டோம். ரஷ்யாவின் வடக்கு காக்சஸில் பிரிவினைவாதத்தையோ அல்லது பயங்கரவாதத்தையோ அமெரிக்கா ஆதரிக்கக் கூடாது என்று மீண்டும் மீண்டும் வேண்டினேன். ஆனால் அவர்கள் அதை எப்படியும் தொடர்ந்து செய்தார்கள். அரசியல் ஆதரவு, தகவல் ஆதரவு, நிதி ஆதரவு, இராணுவ ஆதரவு கூட அமெரிக்காவிடமிருந்தும் காகசஸில் உள்ள பயங்கரவாத குழுக்களுக்கு தொடர்ந்து வந்தது.

2010 இல் அமெரிக்க அதிபரிடம் ஒருமுறை இந்தப் பிரச்சினையை எழுப்பினேன். சி.ஐ.ஏ அதற்குப் பதிலளிக்கையில், நாங்கள் ரஷ்யாவில் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். இது சரியான செயல் என்று நாங்கள் நம்புகிறோம், நாங்கள் அதை தொடர்ந்து செய்வோம் என பெரும் அபத்தமாக கூறினார்கள்".

இவ்வாறு புட்டின் பதிலளித்துள்ளார்.

### பிரிட்டன் பிரதமர் ஜோன்சனின் அமைதி பேச்சுவார்த்தை எதிர்ப்பு:

"உக்ரைன் அதிபர் எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தடை விதித்து உத்தரவு பிறப்பித்தது, பிரிட்டன் பிரதமர் ஜோன்சனே ஆவார். அவர் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்பை காட்டினார்.

ரஷ்யா ஒருபோதும் பேச்சுவார்த்தைகளை நிராகரித்ததில்லை. நாங்கள் மறுக்கவில்லை. பகிரங்கமாக மறுத்தவர்கள் அவர்கள்தான்.

உக்ரைன் அதிபர், பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ஜோன்சனின் கோரிக்கை அல்லது வற்புறுத்தலுக்கு கீழ்ப்படிந்தார் என்பது எனக்கு கேலிக்குரியதாகவும் மிகவும் வருத்தமாகவும் தெரிகிறது. இந்தப் போரை ஒன்றரை வருடங்களுக்கு முன்பே நாம் நிறுத்தியிருக்கலாம். ஜோன்சன் இதற்கு தடை விதித்ததால் அங்கே மேலும் போர் தொடர்கிறது" என்றார் புட்டின்.

"ஏன் அப்படிச் செய்தார்?" என டக்கர் கார்ல்சன் கேட்ட போது, "ஏதோ ஒரு காரணத்திற்காக, ரஷ்யாவை போர்க்களத்தில் தோற்கடிக்க முடியும் என்ற மாயை அனைவருக்கும் இருந்தது. ஆணவத்தின் காரணமாகவும் இருக்கலாம். ஆனால் சிறந்த புத்திசாலித்தனத்தால் அல்ல" என்றும் புட்டின் பதிலளித்தார்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**
அவுஸ்திரேலியா

# அஸ்—ஸிறாஜ் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி

அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலயம்_ 2024 வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் அங்குரார்ப்பண நிகழ்வு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் ஏ.ஜீ.பஸ்மில் (SLEAS) தலைமையில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இப்பாடசாலையில் கல்வி கற்று தேசிய ரீதியில் விளையாட்டில் சாதனை படைத்த மாணவர்கள் 'அஸ்ஸிறாஜின் ஒளிச்சுவாலையை ஏந்தி' நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

ஆரம்ப நாள் நிகழ்வில், பிரதம அதிதியாக முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம் கலந்து கொண்டு இல்ல விளையாட்டியினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். மேலும் அதிதிகளாக ஓய்வு நிலை அதிபர்களான எம்.ஐ.சஹாப்தீன், ஏ.ஜீ.அன்வர், உதவிக்கல்விப் பணிப்பாளர் ஜெமீல், கல்லூரியின் பிரதி மற்றும் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இப்பாடசாலையின் மாணவ மாணவிகளை கொண்டு அறபா, மினா, ஸம்ஸம் என்று மூன்று இல்லங்கள் பிரிக்கப்பட்டு பல்வேறு வகையான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன.

வருடந்தோறும் நடைபெறும் இந்த இல்ல விளையாட்டு போட்டியின் மூலம் பிரகாசிக்கும் விளையாட்டு வீரர்கள் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் சாதனை படைத்து இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்து வருகின்றனர்.

**எம்.எஸ்.எம்.றிஸ்வான்...**
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# கொஸ்கமவில் மனத்தூய்மைக்கான தியான பயிற்சி 10 ஆம் திகதி ஆரம்பம்

குருஜி எஸ். என். கோயங்கா அவர்களின் வழிகாட்டலில் கொஸ்கம, பஹலா கொஸ்கம, தம்ம சோபா விபாசனா தியான மையத்தில் மார்ச் 10 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை பத்து நாட்கள் தியான பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.



பர்மாவைச் சேர்ந்த ஊ.பா. கின் அவர்களிடமிருந்து கற்று, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் விபாசனா கற்றுத் தந்த ச. கோயங்கா அவர்களால் மனத்தூய்மைக்கான தியான பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றது.

இவர்களது இலவசபயிற்சி நெறியில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கலந்து கொள்ளலாம். விபாசனா தியான மையத்தில் இணைந்து கொள்ள விரும்புவர்கள் 0772448608, 0773504491, 0774935850 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். மேலும், www.sobha.dhamma.org என்ற இணையத்தில் முன்பதிவுசெய்து கொள்ளவும் முடியும்.

மனத்தூய்மைக்கான இந்த தியான பயிற்சி நெறியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**எச்.எச்.விக்கிரமசிங்க...**

# விண்வெளியில் 400 கி.மீ தூரம் பயணம் செய்ய வீரர்கள் தயார்!



மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் 'ககன்யான்' திட்டத்தின் மூலம் விண்வெளி செல்லும் நான்கு இந்திய வீரர்களை பிரதமர் நரேந்திர மோடி கடந்த செவ்வாய்க்கிழமையன்று அறிமுகப்படுத்தி வைத்தார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்துக்கு கடந்த செவ்வாயன்று வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி நிலையத்தில் பி.எஸ்.எல்.வி ஒருங்கிணைப்பு வசதி (PIF) உள்ளிட்ட விண்வெளி உள்கட்டமைப்புத் திட்டங்களைத் தொடக்கி வைத்தார். அப்போது, மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் மூலம் விண்வெளி செல்லும் 4 வீரர்களை பிரதமர் மோடி அறிமுகப்படுத்தினார்.

அதன்படி, குரூப் கப்டன்கள் பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர், அஜித் கிருஷ்ணன், அங்கத் பிரதாப், விங் கமாண்டர் சுபான்ஷு சுக்லா ஆகியோர் ககன்யான் திட்டத்தின் மூலம் விண்வெளி செல்ல உள்ளனர். இவர்கள் கடந்த ஆறு ஆண்டுகளாக விண்வெளி செல்வதற்கான பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர். இந்தநிலையில் இந்த நால்வருக்கும் மிஷன் இலச்சினையை பிரதமர் மோடி வழங்கினார்.

அதன் பின்னர் அங்கு நடைபெற்ற விழாவில் பேசிய பிரதமர் மோடி, "இந்த நால்வரும் சாதாரண மனிதர்கள் அல்ல. 140 கோடி இந்தியர்களின் கனவுகளை விண்வெளிக்கு எடுத்துச் செல்லப் போகும் நான்கு சக்திகள். 40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியர் ஒருவர் விண்வெளிக்குச் செல்கிறார். இந்த முறை நேரமும் நமதே, கவுண்டவுன் நமதே, ரொக்கெட்டும் நமதே. இன்று இந்த நான்கு விண்வெளி வீரர்களைச் சந்தித்து, அவர்களை நாட்டுக்கு அறிமுகம் செய்து வைக்கும் வாய்ப்புக் கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுக்கு இந்தியாவின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய இந்தியாவின் பெருமை நீங்கள் தான்" என்று குறிப்பிட்டார்.



## விண்வெளி ஆய்வில் இந்தியாவின் அடுத்தடுத்த சாதனைகள்!

ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தீவிரம் காட்டி வருகிறது. ககன்யான் என்று பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 4 விண்வெளி வீரர்கள் விண்கலம் மூலம் தரையில் இருந்து 400 கி.மீ தூரம் கொண்ட சுற்றுவட்டப் பாதைக்கு அனுப்பப்பட உள்ளனர். அங்கிருந்தபடியே 3 நாட்கள் ஆய்வு மேற்கொண்டு, பின்னர் மீண்டும் அவர்களை பூமிக்கு பத்திரமாக திரும்ப அழைத்து வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பி மீண்டும் அழைத்து வருவது சவாலான பணியாகும். இதில் விண்கலத்தை எதிர்பாராத ஆபத்துகளில் இருந்து பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும். இதற்காக பல்வேறுகட்ட பரிசோதனைகள் நடத்துவதற்கு இந்திய விண்வெளி ஆய்வு நிலையமான இஸ்ரோ திட்டமிட்டது.

ஏற்கனவே விண்கலம் கீழிறங்கும்போது பரசூட்கள் விரிதல் போன்ற சிறிய அளவிலான சோதனைகள் இஸ்ரோவால் நடத்தப்பட்டன. தொடர்ந்து மனிதர்களை சுமந்து செல்லும் ஆளில்லாத விண்கலத்தை 4 முறை விண்ணுக்கு அனுப்பி பத்திரமாக பூமிக்கு கொண்டுவரும் பரிசோதனைகளும் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்ட நால்வரும் இந்திய விமானப் படையில் விங் கமாண்டர்கள் அல்லது குரூப் கப்டன்களாக பணிபுரிந்தவர்கள் என்றும் சோதனை விமானிகளாக பணிபுரிந்த விரிவான அனுபவம் கொண்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தற்போது விண்வெளி செல்வதற்கான பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

## மூன்று நாட்கள் ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் பத்திரமாக பூமிக்குத் திரும்புவர்

ககன்யான் திட்டத்தில் வீரர்கள் பூமியின் குறைந்த சுற்றுப் பாதைக்கு பயணிப்பர். பூமியிலிருந்து விண்வெளியில் 400 கி.மீ தூரம் பயணித்து 3 நாட்கள் தங்கி ஆய்வு மேற்கொள்வர். இது இந்தியாவின் மனித விண்வெளிப் பயணத் திறனை நிரூபிக்கும் பயணமாகும். ஆய்வுக்குப் பின் வீரர்களை மீண்டும் பாதுகாப்பாக பூமிக்கு கொண்டு வருவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ அனுப்பிய சந்திரயான் 3 விண்கலம் கடந்தாண்டு நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. இதன் மூலம் பூமியின் தெற்குப் பகுதியில் தரையிறங்கிய முதல் விண்கலம் என்ற சாதனையையும் சந்திரயான் படைத்தது. இதற்கிடையே அடுத்த கட்டமாக இப்போது மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் முயற்சியை இஸ்ரோ மேற்கொள்ளவுள்ளது.

ககன்யான் என்பது சமஸ்கிருத சொல்லாகும். இதற்குக் கைவினை அல்லது வாகனம் என்பது பொருள். 9 ஆயிரம் கோடி ரூபா செலவில் உருவாக்கப்படும் இந்த ககன்யான் திட்டம் முழுக்க முழுக்க இந்தியாவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ முயற்சியில் உருவாக்கப்பட்டதாகும். இத்திட்டம் வெற்றிகரமாக முடியும் பட்சத்தில் சோவியத் யூனியன், அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் நான்காவது நாடாக இந்தியா இருக்கும். இந்த ககன்யான் மிஷன் திட்டத்தின் கீழ் அடுத்த வருடம் இந்தியர்கள் விண்வெளிக்கு அனுப்பப்படுவார்கள்.

ஏற்கனவே இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ராகேஷ் சர்மா, கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் ஆகியோர் விண்வெளிக்குச் சென்றுள்ளனர். இருப்பினும், அவர்கள் அனைவரும் அமெரிக்காவின் நாசா அல்லது சோவியத் ஒன்றியம் மூலம் சென்றவர்களாவர். முழுக்க முழுக்க இந்தியா உருவாக்கிய ரொக்கெட் தொழில்நுட்பம் மூலம் இந்தியர்கள் விண்வெளிக்குச் செல்வது இதுவே முதன் முறையாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்திய விண்வெளி வீரர்கள் 400 கி.மீ தொலைவிலுள்ள சுற்றுப்பாதைக்கு அனுப்பப்படுவார்கள். அவர்களை பாதுகாப்பாக இந்தியப் பெருங்கடலில் இறங்க வைப்பதே இஸ்ரோவின் திட்டமாகும். கடந்த சில ஆண்டுகளாகவே இஸ்ரோ பல திட்டங்களை வெற்றிகரமாக முடித்துள்ள நிலையில், இப்போது ககன்யான் திட்டமும் மிகப் பெரிய வெற்றியைப் பெறும் என்பதில் முழுமையான நம்பிக்கை நிலவுகின்றது.

இந்தியாவின் வரலாற்று சிறப்புமிக்க ககன்யான் விண்வெளிப் பயணத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு விண்வெளி வீரர்களை பிரதமர் நரேந்திர மோடி திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தினார்.

சர்வதேச அளவில் விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது. சந்திரனின் தென்துருவத்தில் வெற்றிகரமாக கடந்த ஆண்டு ரோவரை தரையிறக்கி மிகப்பெரிய சாதனையை இந்தியா படைத்தது. இதுவரை எந்த நாடுகளுமே தென்துருவத்தில் கால்பதிக்காத நிலையில், இந்தியா சந்திராயன் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி அனைவரையும் திரும்பி பார்க்க வைத்தது. அடுத்ததாக சூரியன் பற்றி ஆய்வுக்காக ஆதித்யா விண்கலத்தை ஏவி மேலும் ஒரு மைல்கல்லை எட்டியது. விண்வெளி ஆராய்ச்சியில் உலக நாடுகளுடன் இந்தியா போட்டி போட்டாலும் இதுவரை மனிதர்களை இந்தியா விண்வெளிக்கு அனுப்பியது கிடையாது. அந்த சாதனையை எட்டுவதற்காக கொண்டு வரப்பட்டதுதான் ககன்யான் திட்டம். விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தில் தற்போது இஸ்ரோ தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

விண்வெளி சூழல்களை எதிர்கொள்ளும் வகையில் வீரர்களின் உடல்நிலையையும், மன நிலையையும் தயார்படுத்துவதே பயிற்சிகளின் பிரதான நோக்கம் ஆகும்.

கடந்த சில காலமாகவே இந்திய விண்வெளித் துறையில் இந்தியா செய்த சாதனைகள் மிகப் பெரியன. குறைந்த செலவில் பல அதிநவீன விண்வெளித் திட்டங்களை இஸ்ரோ வெற்றிகரமாக முடித்துக் காட்டியுள்ளது. இதனால் இப்போது உலக நாடுகள் கூட தங்கள் செய்மதிகளை அனுப்ப இந்தியாவிடம்தான் வருகின்றன. அந்தளவுக்கு இந்தியா விண்வெளி ஆய்வுத் துறையில் முக்கிய நாடாக உருவெடுத்து விட்டது.

# அமைச்சர் ஜீவன் தொண்டமான் இந்திய உயர்ஸ்தானிகருடன் சந்திப்பு



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை (29) கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

இந்திய அரசின் நிதி பங்களிப்புடன் மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமாகவும், சமகால நிலைவரங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

மலையக மறுமலர்ச்சிக்காக இந்தியா வழங்கி வரும் அபிவிருத்திசார் பங்களிப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையக மாணவர்களுக்கு இந்தியா வழங்கிவரும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கும் நன்றி தெரிவித்தார். அதேவேளை இலங்கை, இந்தியாவுக்கிடையிலான உறவை மேம்படுத்துவதில் மலையக மக்களுக்குரிய வகிபாகம் பற்றியும் பேசப்பட்டுள்ளது. குறிப்பாக பாரத் லங்கா வீட்டு திட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# ஹரிஹரன் தன்வந்த்துக்கு கிழக்கு மாகாண ஆளுநர் வாழ்த்து



பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த திருகோணமலை 13 வயது சிறுவன் ஹரிஹரன் தன்வந்த் துக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

தனுஷ்கோடியிலிருந்து ஆரம்பித்த சாதனைப் பயணம் தலைமன்னாரை வந்தடைந்தது. சுமார் 31.05 கிலோ மீற்றர் தூரத்தை கடந்து குறித்த சாதனையை தன்வந்த் படைத்துள்ளார்.

இச்சிறுவன் இச்சாதனையை படைத்து கிழக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# இன்றைய பலன்கள்


(02.03.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)




**மேஷம்:** எதிரிகள் விலகுவர்.எடுத்த காரியத்தில் இருந்த குறுக்கீடுகள் அகலும். கடன் சுமை குறையும். உடல் நலம் சீராக மாற்று மருத்துவம் கை கொடுக்கும்.




**ரிஷபம் :** பொருளாதார பற்றாக்குறை அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களில் ஏமாற்றத்தை சந்திப்பீர்கள். குடும்பத்தில் கடன் பிரச்சினை மீண்டும் தலை தூக்கலாம்.



**மிதுனம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வருமானத்திலும் சிறு சிறு தடைகள் வந்து சேரும். வாழ்க்கை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும்.




**கடகம்:** வீடுமாற்றம் நன்மை தரும். எந்த ஒரு காரியத்தை செய்ய நினைத்தாலும் பணத்தை வைத்துக் கொண்டு செய்ய வேண்டியது இல்லை.




**சிம்மம்:** கடைசி நேரத்தில் காரியங்கள் கை கூடிவிடும். உறவினர் பகை அதிகரிக்கும். உடல்நலம் கருதி ஒரு தொகையை செலவிட நேரிடும்.



**கன்னி:** மிகுந்த கவனத்தோடு செயல்பட வேண்டும். தொழில் வளர்ச்சியிலும் குறுக்கீடுகள் ஏற்படலாம். யாரையும் நம்பி செயல்பட இயலாது.




**துலாம்:** பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு உண்டு. விரயங்கள் கூடுதலாக இருக்கும்.



**விருச்சிகம்:** இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். கடந்த காலத்தில் பலமுறை முயற்சி செய்தும் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது திடீரென நடைபெறும்.



**தனுசு:** கடை திறப்பு விழா கட்டிட திறப்பு விழாக்கள் நடைபெறும் வாய்ப்பு உண்டு. புது முயற்சிகளுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர்.



**மகரம்:** கடன் சுமை குறையும். கவலைகள் தீரும். இடமாற்றம் இனிமை தரும். சாதாரண சிகிச்சையிலே நோய்கள் குணமாகும்.



**கும்பம்:** பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. திட்டமிட்ட காரியங்கள் திசைமாறி செல்லும்.



**மீனம்:** ஆரோக்கியத்தில் தொல்லை அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் முயற்சியில் தாமதம் ஏற்படும். கல்யாண வாய்ப்பு கைகூடுவதில் தடைகள் உருவாகும்.

## எரிபொருள், சமையல் எரிவாயு...

மாதாந்த விலை சூத்திரத்திற்கமைய நேற்று முன்தினம் சமையல் எரிவாயு விலைகளில் திருத்தங்களை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதை குறிப்பிட்ட அவர், எனினும் இம் மாதத்திற்கான சமையல் எரிவாயு விலைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எரிபொருட்களின் விலைகளில் எந்தவித மாற்றமும் இந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட மாட்டாது என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் விலை திருத்தங்கள் தொடர்பில் நேற்று லாப் கேஸ் நிறுவனமும் அறிவித்துள்ளது.

அந்த வகையில் மார்ச் மாதத்திற்கான எரிவாயு விலையில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படாது என லாஃப்ஸ் கேஸ் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துள்ளது.

## அமைச்சர் ஜீவன்...

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். அத்துடன் இலங்கை மக்களுக்கு தமிழக அரசாங்கம் வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், தமிழ்மொழியைக் காப்பதற்காக முதல்வர் ஸ்டாலின் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் காலத்தின் கட்டாய தேவையென்றார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் பிறந்ததினத்தையிட்டு அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே அமைச்சர் ஜீவன் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார். அவ்வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் மேலும் தெரிவித்தாவது, "இன்று அகவை தினம் காணும் தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் தேக ஆரோக்கியத்துடன் மக்களுக்கு தொடர்ந்து சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன். தமிழக மக்களால் மட்டுமல்ல, உலக வாழ் தமிழ் மக்களால் நேசிக்கப்படும் முதல்வர் ஸ்டாலினின் வெற்றி பயணம் தொடரவும் வாழ்த்துக தெரிவித்துக்கொள்கின்றேன்" என்றார்.

## மாணவர்களின் புத்தகப்பை...

மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள பயிற்சிப் புத்தகங்கள் தவிர்ந்த ஏனைய பாடப்புத்தகங்களை மாணவர்கள் தினமும் பாடசாலைக்கு கொண்டுவருவதை குறைப்பதற்கு கல்வி அமைச்சு புதிதாக நடவடிக்கையொன்றை மேற்கொண்டுள்ளது. அதற்கிணங்க அது தொடர்பில் அதிபரின் நேரடிக் கண்காணிப்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக கல்வியமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா உரிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளார். பாடசாலை புத்தகப் பைகளின் சுமை அதிகரிப்பினால் பாடசாலை மாணவர்களுக்கு முதுகுத்தண்டு பாதிப்புகள் போன்ற பல்வேறு உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக சுகாதார அமைச்சு ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தது. அதனைக் கருத்திற்கொண்டு மாணவர்களின் புத்தகப் பைகளின் எடையைக் குறைப்பது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதுடன், அதன் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பாடப்புத்தகங்களை தொகுதிகளாக அச்சிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## தேயிலை தொழில்துறையினருக்கு...

தேயிலை தொழில்துறையினருக்கு சந்தை விலையை விடவும் குறைவாக வழங்குவதே எமது நோக்கமாகும். அதன்படி குறைந்தபட்சம் 2,000 ரூபாய் என்ற குறைந்த விலையில் இந்த உரம் விவசாயிகளுக்கு வழங்கப்படும். அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கமைய மானிய விலையில் உரத்தை வழங்கும்போது தேயிலை உற்பத்தியை மேம்படுத்த முடியுமென கருதுகிறேன். மேலும்,தேயிலை தொழில் துறையிலும் புதிய தொழில்நுட்பத்தை புகுத்த எதிர்பார்க்கிறோம்.

மேலும், அதிக பிரதிபலன்களை பெறுவதற்கான 59 திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 55 திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகின்றன. ஒரு ஏக்கரில் மாதாந்தம் 1,350 கிலோ தேயிலை கிடைக்கிறது. இத்திட்டத்துக்காக இவ்வருடத்திலும் 1,000 மில்லியன் ரூபாவை செலவிட எதிர்பார்க்கிறோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தூரநோக்கிலேயே விவசாயத்தை மேம்படுத்துவதற்கான இவ்வாறான திட்டங்கள் சாத்தியமாக செயற்படுத்தப்படுகின்றன. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு விவசாய அமைச்சுடன் இணைக்கப்படாவிட்டால் இந்த வேலைத்திட்டங்களை செய்திருக்க முடியாது. எனவே சரியான தீர்மானங்களை மேற்கொண்டமைக்காக ஜனாதிபதிக்கு நாம் நன்றி கூற வேண்டுமென்றார்.

## இளைஞர் மன்ற...

தளமாக உள்ளது இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம் உட்பட தெற்காசிய பிராந்தியம் முழுவதிலுமிருந்து வருகை தரும் பிரதிநிதிகளுடன் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், மாத்தறை மற்றும் மட்டக்களப்பு நகரங்களில் அமைந்துள்ள ஐந்து *American Space*களின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

சமூக சேவையின் முக்கியத்துவத்தை முன்னிலைப் படுத்திக் காட்டும் வகையில் கல்வி வளாகங்களிலுள்ள தராதரங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தனித்துவமான செயற்திட்டத்தையும் இவ்வருட உச்சி மாநாடு உள்ளடக்கியிருக்கும்.

உள்ளூர் சமூகங்களுக்குள் நேர்மறையான தாக்கத்தையும் நிலைபேறான அபிவிருத்தியையும் வளர்க்கும் வகையில் கொழும்பிலுள்ள ஒரு பின்தங்கிய பாடசாலையிலுள்ள ஒரு நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் மரக்கறித் தோட்டம் ஆகியவற்றை மேம்படுத்தும் பணியில் இம்மாநாட்டில் பங்குபற்றும் இளம் தலைவர்கள் ஒன்றிணைந்து பணியாற்றுவர்.

அமெரிக்கத் தூதரகத்தின் இளைஞர் மன்றம், அனைவரையும் உள்ளடக்கிய தலைமைத்துவப் பண்புகளை எடுத்துக்காட்டும் வகையில் 18 முதல் 25 வயதுடைய துடிப்பான இலங்கையரை உள்ளடக்கிய ஒரு மன்றமாகும். பல்வேறு பின்னணியுடைய 15 இளைஞர்களைக் கொண்ட ஒவ்வொரு இளைஞர் மன்றக் குழுவும், தலைமைத்துவத் திறன்களை கூர்மைப்படுத்துவதற்கும், செயற்திட்டங்களை முகாமை செய்யும் நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், ஒன்றிணைந்த தீர்வுகள் ஊடாக சமூகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் செயற்படுகின்றன. அத்துடன், ஆண்டு முழுவதும் கற்றல், பரிமாற்றம் மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முன்முயற்சிகளுக்கான வாய்ப்புகளை வழங்கி, தலைமைத்துவப் பண்புகளை தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யும் மையங்களாக இலங்கையிலுள்ள ஐந்து *American Space*களும் தொழிற்படுகின்றன,

## பொருளாதார திட்டங்களுக்கு...

செயற்பாடுகள் தடைப்பட்டிருந்ததை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, இந்நாட்டு துறைமுகங்களின் பெறுமதியை பேணுவதற்காக சுயஸ் கால்வாய் மற்றும் செங்கடலின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

திருகோணமலை கடற்படை முகாமில் நேற்று (01) நடைபெற்ற இலங்கை கடற்படையின் விசேட கப்பல் படையணிக்கு ஜனாதிபதி வர்ணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். இலங்கைக்கு சொந்தமான கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, நாட்டின் கடல்சார் இலக்குகளை நனவாக்குவதற்காக அர்ப்பணிக்கும் இலங்கை கடற்படையின் சிறப்புக் கப்பல் படையணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வர்ணங்கள் வழங்கினார். கடற்படையின் விசேட கப்பல் படையணியின் கப்பல்களால் கடற்பரப்பில் நிகழ்த்தப்பட்ட சாகசங்களும் நிகழ்வை வண்ணமயமாக்கியது. அதனையடுத்து, முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க படகில் சென்று கடலில் நங்கூரமிடப்பட்டிருந்த கஜபாஹு, சமுதுர, பராக்கிரமபாகு, சாகர, உதாரா, சக்தி, நந்தமித்ர, சயூரல ஆகிய போர்க்கப்பல்களை கண்காணித்தார்.

இதன்போது கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

அதனையடுத்து கடற்படை முகாமின் பதிவேட்டில் ஜனாதிபதி குறிப்பொன்றையும் பதிவுசெய்தார்.

வர்ணங்கள் வழங்கும் நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"கடற்படையின் சிறப்பு கப்பல் படையணிக்கு இன்று மிகவும் முக்கியமான நாள். இப்படையணிக்கு இன்று ஜனாதிபதி விருதுகள் வழங்கப்பட்டன. கடற்படையின் விசேட கப்பல் படையணி ஆரம்பிக்கப்பட்டு 30 வருடங்கள் கடந்துவிட்டன. இந்த படை 1993 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இராணுவத்தில் இரண்டு சிறப்பு சேவைப் பிரிவுகள் உள்ளதால், கடற்படையிலும் இதுபோன்ற படையணிகளை ஆரம்பிக்கத் தீர்மானித்திருந்தோம். கடற்படைத் தளபதிகள் தேசிய பாதுகாப்பு சபையில் நீண்டகாலமாக இது குறித்து கலந்தாலோசித்தனர்.

எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாத அமைப்புக்கு எதிரான போரில் கடற்படையின் தந்திரோபாய முயற்சிகளில் ஒன்றாக இந்தப் படையணியைக் கூறலாம். எனவே, இந்தப் படையணி ஆற்றிய சேவையை நான் விவரமாக நினைவுகூரத் தேவையில்லை. இருப்பினும் அவர்களின் சேவைக்கு நன்றி கூறுகிறேன்.

அத்தோடு நின்றுவிடாமல் படையணி இலங்கை கடற்படையின் முக்கிய பிரிவாக கௌரவிப்புக்கும் வரவேற்புக்கும் பாத்திரமாகியுள்ளமை சிறம்பசமாகும். எனவே, ஜனாதிபதி வர்ணத்தைப் பெற்ற பின்னர் மேலும் வலுவான முறையில் பணிகளை முன்னெடுத்து இந்தப் படையணியின் நற்பெயரைப் பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன், இறுதி யுத்தத்தின் போது இலங்கை கடற்படையினர் நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றியது. உயிர்த் தியாகம் செய்தவர்கள் மற்றும் இழக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலான குறிப்புக்கள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. அதேபோல் வரலாற்றுக் காலத்திலிருந்தே இலங்கை கடல் பிராந்தியத்தினதும், இந்து சமுத்திரத்தினதும் பாதுகாப்புக்காக கடற்படை அர்ப்பணித்துள்ளது. அது குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையையும் ஏற்றுக்கொண்டுள்ளோம். இந்துசமுத்திரத்திற்குள் நமது பொருளாதாரத் திட்டங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்த ஒருபோதும் இடமளியோம். செங்கடலின் பாதுகாப்புக்காக நமது கடற்படையை ஈடுபடுத்த தீர்மானித்தோம். 1967 இஸ்ரேல் அரபு போரின் போது சுயஸ் கால்வாய் மூடப்பட்டதால் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதனால் 10 வருடங்களாக கொழும்பு துறைமுகத்தின் பணிகள் நிறுத்தப்பட்டிருந்ததை நாம் அறிவோம். அதனால் இந்து சமுத்திரம், சுயஸ் கால்வாய், செங்கடலின் பாதுகாப்புக்குமான ஒத்துழைப்புக்களை வழங்கி, நமது துறைமுகங்களின் பொருளாதார மதிப்பைப் பாதுகாக்க வேண்டியதும் அவசியமாகும். மேலும், எதிர்காலத்தில் நமது கடற்படை இந்த பணியில் வெற்றிகரமாக செயற்படும் என்ற நம்பிக்கை உள்ளது. இன்று இந்த நிகழ்வு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் நடைபெறுகிறது. திருகோணமலை துறைமுகமானது இலங்கையில் மாத்திரமன்றி உலகிலேயே பிரதான துறைமுகமாக கருதப்படுகிறது. அனுராதபுரம் பொலன்னறுவை காலங்களில் இத்துறைமுகம் முக்கியத்துவம் மிக்கதாக கருதப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் போது ஆசிய பிராந்தியத்தில் ஆங்கிலேயரின் வெற்றிக்கு இந்த துறைமுகமும் வழிவகுத்தது. எமது நாட்டிற்குச் சொந்தமான இந்தத் துறைமுகத்தைப் பாதுகாக்க வேண்டும். இதன்போது நாம் மத்தியஸ்தமாக செயற்பட வேண்டியதும் அவசியமாகும். இன்று முப்படைகளின் தளபதி என்ற வகையில் கடற்படை சிறப்பு கப்பல் படையணியைக் கண்காணிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதற்காக கடற்படையினருக்கும் அவர்கள் நாட்டிற்கு ஆற்றும் சேவைக்காகவும் நன்றி தெரிவிகிறேன்" என்றார். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வு) ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவி நிலை பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, கிழக்கு கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வா, கடற்படை விசேட கப்பல் படையணியின் தளபதி தர்மசிறி ஹேரத் உள்ளிட்ட அதிகாரிகளும் கடற்படைச் சிப்பாய்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## 05ஆம் திகதி முதல்...

மு.ப 10.30 மணி முதல் பி.ப 4.30 மணிவரை கடந்த 20ஆம் திகதி இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல், வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம், ஈட்டுச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம், நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டமூலம், உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புத் (திருத்தச்) சட்டமூலம், கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம், ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் என்பன இரண்டாவது தினமாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அடுத்த நாளுக்கு ஒத்திவைக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பி.ப 4.30 மணி தொடக்கம் பி.ப 5.30 மணிவரை அரசாங்க தரப்பினால் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதத்துக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மார்ச் 06ஆம் திகதி புதன்கிழமை மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.00 மணி வரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.00 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைகளுக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மு.ப 10.30 மணிக்கு அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் 2024.02.03ஆம் திகதிய 2369/58ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் காலாவதியானதைத் தொடர்ந்து ஜனாதிபதியால் வெளியிடப்படவுள்ள புதிய வர்த்தமானி அறிவித்தலின் கீழான கட்டளை அன்றையதினம் விவாதமின்றி அங்கீகரிக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை முன்னையதினம் ஒத்திவைக்கப்பட்ட பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல், வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம், ஈட்டுச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம், நிதி குத்தகைக்குவிடுதல் (திருத்தச்) சட்டமூலம், உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புத் (திருத்தச்) சட்டமூலம், கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம், ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம், சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை (திருத்த) சட்டமூலம் ஆகியன விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளன.

கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள வரையறுக்கப்பட்ட சீ நோர் நிறுவனம், இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை தேசிய நீரியியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் மூன்று வருடாந்த அறிக்கைகள் தொடர்பான முன்மொழிவுகள் விவாதமின்றி அங்கீகரிக்கப்படவுள்ளன.

இதன் பின்னர் பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

மார்ச் 07ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரை வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதம் தொடர்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி இணைந்து கொண்டுவரும் சபை ஒத்திவைப்பு விவாதத்துக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் தாக்கியதில்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும்,

மற்ற இருவரின் உடல்நிலையில் முன்னேற்றம்டைந்துள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் இந்த மூன்று மாணவர்களையும் தாக்கியதாக முறைப்பாடும் கிடைத்துள்ளதாக பாதுக்க பொலிஸார் தெரிவித்தனர்.

## பாக்கு நீரிணையை...

சாதனையை படைத்துள்ளதுடன் அவரது பயிற்றுனரது சாதனையையும் முறியடித்துள்ளார். நேற்று (01) அதிகாலை 5.30 மணியளவில் தனுஷ்கோடியிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்த தன்வந்த், மதியம் 2.00 மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

தனுஷ்கோடி முதல் தலைமன்னார் வரையான 32 கிலோமீற்றர் தூரத்தை மிகக் குறைவான நேரத்தில் நீந்திக்கடந்து இலங்கையில் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

09 மணி நேரமும் 37 நிமிடங்கள் 54 செக்கன்களில் நீந்திக் கடந்து இலங்கையில் புதிய சாதனையை இம்மாணவன் நிலைநாட்டியுள்ளார்.

## லூஷன் ராஜகருணாநாயக்க...

அவர் தனது பத்திரிகைத்துறை வாழ்க்கையை டைம்ஸ் ஒப் சிலோன் மற்றும் சண்டே டைம்ஸ் என்பவற்றின் நிருபராக 1960 இல் ஆரம்பித்தார். 1972 முதல் 2000ஆம் ஆண்டுவரை சண்டே ஐலண்ட், த சண்டே டைம்ஸ், த சண்டே லீடர், சண்டே ஒப்சர்வர் என்பனவற்றின் புகழ் பெற்ற கட்டுரையாளராக விளங்கினார். இறக்கும்வரை த ஐலண்ட் மற்றும் டெய்லி நியூஸ் என்பனவற்றில் கட்டுரை எழுதி வந்தார். 2000 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அவர் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பதவியை வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலம் மற்றும் சிங்கள இதழியல் துறையில் பரந்த மற்றும் வளமான அனுபவம் கொண்ட லூஷன் ராஜகருணாநாயக்க ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளுக்காக அதிகம் பாடுபட்டவர்.

## சாந்தனின் பூதவுடல்...

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று 32 ஆண்டுகள் சிறையில் இருந்த சாந்தன் விடுதலையாகினார். இந்நிலையில் அவர் சுகயீனமடைந்து ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தாநிலையில் கடந்த வியாழக்கிழமை (28) காலை திடீரென மாரடைப்பால் உயிரிழந்தார். சடலத்தை பெற்றுக்கொள்வதற்காக உறவினர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இவரது இறுதிக்கிரியைகள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென உறவினர்கள் தெரிவித்தனர்.

## பிணையில் வந்த...

பகுதியிலுள்ள பள்ளிவாசலொன்றுக்கு அருகிலுள்ள வீடொன்றில் சம்பவதினமான கடந்த வியாழக்கிழமை இரவு சட்டவிரோதமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி எனப்படும் ஸஹ்ரான் ஹாசிமின் சகோதரியின் கணவர் மற்றும் காத்தான்குடியில் 20170310ஆம்திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்த ஸஹ்ரான் பிரிவைச் சேர்ந்த 03 பேர் உட்பட 30 பேர் ஒன்றுகூடிய நிலையில் பொலிஸார் சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் ஸஹ்ரான் ஹாசிமின் கொள்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஒன்றுகூடினார்களா ? என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தேசிய புலனாய்வு பிரிவினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், விசாரணையின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மீள் புதுப்பிக்கத்தக்க...

முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் திட்டத்தை நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவை தளமாகக் கொண்ட யு சோலர் கிளீன் எனர்ஜி சொலுசன்ஸ் என்ற நிறுவனம் இந்த திட்டத்தின் கீழ் 530 கிலோவாட் காற்றாலை மின்சாரம், 1,700 கிலோவாட் சூரியசக்தி, 2,400 கிலோவாட் மின்கலம் சக்தி மற்றும் 2,500 கிலோவாட் டீசல் மூலம் மீள் புதுப்பிக்கத்தக்க வலு சக்தியை உருவாக்க உள்ளது.

இந்தத் திட்ட உதவிகளுக்காக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, முன்னாள் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உட்பட இந்திய அதிகாரிகளுக்கு அமைச்சர் கஞ்சன விஜயசேகர நன்றி தெரிவித்துள்ளார்.

# கிழக்கின் குரல்



## வாகரை கண்டலடி மீன்பிடி துறைமுக பாலம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு

வாகரை கண்டலடி மீன்பிடிதுறைமுக பாலம் ரூ.2.4 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தனின் கருத்திட்டத்துக்கமைய நிதி ஒதுக்கப்பட்டு இப்பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் இப்பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் வாகரை கண்டலடி துறைமுக பாலம், மீனவர்களின் முக்கிய தேவையாகவும் மிக நீண்டகால பிரச்சினையாகவும் கடந்தகாலங்களில் இருந்து வந்தது.





இந்நிகழ்வில் கோறளைப் பற்று வடக்கு பிரதேச செயலாளர் ஜீ. அருணன், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் எந்திரி லிங்கேஸ்வரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கல்குடா தொகுதி அமைப்பாளர் ஜினித்திரராசா, கட்சியின் வாகரை பிரதேசக் குழு தலைவர் மதிவேந்தன், வாகரை வடக்கு கிராமிய குழு தலைவர் ஜெயக்குமார் உட்பட வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

காக்காச்சிவட்டை

## விஷ்ணு மகா வித்தியாலயத்தில் சாதனையாளர் பாராட்டு விழா

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட காக்காச்சி வட்டை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் காக்காச்சிவட்டை கிராமத்திலுள்ள அன்னையின் கரங்கள் எனும் அமைப்பின் ஏற்பாட்டில் சாதனையாளர் பாராட்டு விழா அண்மையில் வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் வித்தியாலய அதிபர் வேகுணாளன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரம் சித்தியடைந்தோர், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டோர், கல்வியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டோர் போன்ற மாணவர்கள் பதக்கங்கள், நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

காக்காச்சிவட்டைக் கிராமத்திலிருந்து பல சமூக சேவைகளை மேற்கொண்டுவரும்அன்னையின்கரங்கள் எனும் அமைப்பின் அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பட்டிருப்புக் கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர் ரி.உதயகுமார், போரதீவுப்பற்று கோட்டக்கல்வி பணிப்பாளர் ரி.அருள்ராசா மற்றும் ஆலயக்குருமார் கிராம பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## களுவாஞ்சிக்குடி பழைய தபாலக கட்டடத்தை புனரமைக்குமாறு அரசிடம் மக்கள் கோரிக்கை

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

களுவாஞ்சிக்குடி தபால் அலுவலக கட்டடத்தை புனரமைக்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி தபால் காரியாலயம் கடந்த யுத்த காலத்தில் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இதனை புனரமைத்து மக்கள் பாவனைக்கு கையளிக்க வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இக்காரியாலயம் நீண்டகாலமாக பழுதடைந்துள்ளமையால் களுவாஞ்சிக்குடி தபாலக நடவடிக்கைகள் வாடகை கட்டடத்திலேயே தற்போது வரை இயங்கி வருகின்றது.

இந்நிலையில் தமது கிராமத்தில் மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் கைவிடப்பட்டிருக்கும் தபால் காரியாலயத்தை புனரமைக்குமாறு அப்பகுதி மக்கள் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர். இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் பணிப்புரைக்கமைய அவரின் பிரதிநிதியாக முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூபாலபிள்ளை பிரசாந்தன் பாழடைந்து கிடக்கும் களுவாஞ்சிக்குடி தபால் காரியாலயத்தை நேரில் சென்று பார்வையிட்டு அங்குள்ள நிலைமைகளை அவதானித்துள்ளார்.

அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கிணங்க பழுதடைந்த களுவாஞ்சிக்குடி தபாலகத்துக்கு சொந்தமான காரியாலயத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார்.

## அக்கரைப்பற்று காதிரிய்யா ஜும்ஆ பள்ளிவாசல் வீதி புனரமைப்பு

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)



அக்கரைப்பற்று காதிரிய்யா ஜும்ஆ பள்ளிவாசல் வீதியின் நிர்மாணப் பணிகள் நேற்று காதிரிய்யா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவரும், முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான அல்ஹாஜ் ஏ.அப்துல் அஸீஸ் தலைமையில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2024 ஆம் ஆண்டுக்கான 1500 கிலோமீற்றர் வீதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இவ்வீதி புனரமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸின் தேசிய தலைவர், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரும், அக்கரைப்பற்று பிரதேச அபிவிருத்திக் குழுத்தலைவருமான ஏ.எல்.எம். அதாஉல்லா பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீதி புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தார். இதன்போது அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் ஐ.எல்.அப்துல் பாரி, பிரதம பொறியியலாளர் சிவசுப்ரமணியம், ஆகியோருடன் காதிரிய்யா பாடசாலை அதிபர ஏ.எம்.ஜெசீம், மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் எம்.சி.எம்.யாசிர், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர், இணைப்பாளர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



தோப்பூர் தி /மூ பாத்திமா மகளிர் கல்லூரி மாணவி இருஷாத் சைனாப் சஹறா 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய சமூக விஞ்ஞான போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று பாடசாலைக்கும் வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

(படம் ; தோப்பூர் குறூப் நிருபர்)

## சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் கலந்துரையாடல்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் பிரதேச சுகாதார நிலைமைகளை ஆராயும் கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (29)நடைபெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஸீர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி மாதாந்த கலந்துரையாடலில் பொது சுகாதார பரிசோதகர்கள், தாதி உத்தியோத்தர்கள் கலந்து கொண்டனர்.

## இலங்கையில் சகல துறைகளும் இலத்திரனியல் மயப்படுத்தப்படும்

(ஒலுவில் விசேட நிருபர்)



உலக மாற்றத்திற்கேற்ப இலங்கையில் சகல துறைகளும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டு மக்களுக்கு விரைவாக சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, தென்கிழக்குப் பல்லைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

நிலையான எதிர்காலத்திற்கான டிஜிட்டல் மாற்றம் எனும் தொனிப்பொருளில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு ஒலுவில் வளாகத்தில் நேற்று (01) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

குறுகிய காலத்திற்குள் தென்கிழக்கு பல்கழைக்கழகம் சர்வதேச ரீதியில் புகழ்பெற்று காணப்படுவதோடு, தொழில்நுட்ப ரீதியிலும் பரிணாம வளர்ச்சி கண்டுவருகிறது.

அதிநவீன தொழில்நுட்ப வசதிகள் அதிகரித்துள்ள இக் கால கட்டத்தில் ஆய்வுத் துறைகளும் அதற்கேற்ற வகையில் எதிர்காலத்தில் முன் கொண்டு செல்ல வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்கு இவ்வாறான ஆய்வரங்கு பெரும் பயனுள்ளதாக அமைவதோடு பல்கலைக்கழகங்களின் பொருளாதார நிபுணர்களின் பங்களிப்பு இன்றியமையாதாகும்.

பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற போது நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு எவ்வாறான தீர்வினை வழங்க வேண்டுமென ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தற்போதைய கால கட்டத்தில் பல்கலைக்கழக சமூகத்திடமிருந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டமிடல்களை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அதனை ஆராய்ச்சியாளர்கள் தமது ஆய்வில் முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் தென்கிழக்குப் பிராந்திய விவசாய, மீன்பிடி துறைகள் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளது. பிராந்திய பொருளாதார மேம்பாட்டிற்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பெரும் பங்கினை வகித்து வருகின்றது.

பிரித்தானியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கமால் விக்கோம் ஆய்வு மாநாட்டின் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டார்.

## தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கான தடை நீடிப்பு

### வழக்கு ஏப்ரல் 05 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(றொட்டவெவ குறூப் நிருபர்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பான வழக்கு விசாரணை ஏப்ரல் 05 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேசிய மாநாட்டுக்கு தடை விதிக்கப்பட்டு திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று (29) விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போதே எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி வரை இவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் இது விசாரிக்கப்பட்டது.

விசாரணையில், இரு தரப்பிலும் சட்டத்தரணிகள் தங்களது சமர்ப்பணங்களை நீதிமன்றத்தில் முன்வைத்தனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு கடந்த (19) நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு தடை விதிக்க கோரி திருகோணமலை சாம்பல்தீவு வட்டார கிளையின் செயலாளர் சந்திரசேகரம் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

## மூதூரில் சட்ட உதவி விழிப்புணர்வு நிகழ்வு



(கந்தளாய், மூதூர் தினகரன் நிருபர்கள்)

மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு சட்ட உதவி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாறக் தலைமையில் நடைபெற்றது. சட்ட உதவி ஆணைக்குழுவின் செயற்பாடுகள், நீதிமன்ற முறைகள் மற்றும் நுகர்வோர் சட்டங்கள் தொடர்பாக சட்டத்தரணிகளால் தெளிவுப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர், சட்டத்தரணிகள், நிர்வாக உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் பங்குபற்றியிருந்தனர்.

## இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



இலங்கை விமானப்படையின் 73 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு வாவியோரங்களில் கண்டல் தாவரங்கள் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு விமானப்படையின் கட்டளை தளபதி குறூப் கப்டன் சரத் பண்டார தலைமையில் சேற்றுக்குடா, சுமைதாங்கி பகுதி வாவிக்கரை ஓரங்களில், சிறந்த சூழலை ஏற்படுத்தும் நோக்குடன் இக் கண்டல் தாவரங்கள் நடப்படுவதாக விமானப்படையினர் தெரிவித்தனர். இதன் போது முதற் கட்டமாக 500 கண்டல் தாவரங்கள் மட்டக்களப்பு விமானப்படை உத்தியோகத்தர்களால் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாண பாடசாலை ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

(ஒலுவில் விசேட நிருபர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். குலேந்திரகுமார் தெரிவித்தார்.

ஆசிரியர் இடமாற்றங்கள் கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள ஆசிரியர் இடமாற்ற சபையின் சிபாரிசுக்கமைய பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு இடமாற்றக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்,இடமாற்றங்கள் எதிர்வரும் 04 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்துக்கு இடமாற்றம் கிடைக்கப்பெற்ற ஆசிரியர்கள் செய்த மேன்முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டு மாவட்டத்திற்கு வெளியே ஆசிரியர்கள் இடமாற்றப்படுவதை இடைநிறுத்தி மாவட்டத்துக்குள் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் இடமாற்றம் கடந்த மாதம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக மாவட்டத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள் அதிகம் காணப்படும் மாவட்டத்திற்கு வெளியே ஆசிரியர்கள் இடமாற்றப்படுவதை இடை நிறுத்தி மாவட்டத்திற்குள் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள சம்மந்தப்பட்ட ஆசிரியர்களின் பெயர் பட்டியல் மாகாண கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

தினகரன் வர்த்தக உலா
shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

# சிறந்த நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்து மீட்சியை உறுதி செய்தது அமானா வங்கி



சவால்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலிலும் அமானா வங்கி இதுவரையில் பதிவு செய்திருந்த உறுதியான நிதிப் பெறுபேறுகளை 2023 ஆம் ஆண்டில் எய்தியிருந்தது. அதனூடாக, வங்கியின் உறுதித் தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், மீட்சி மற்றும் அதிகரித்துச் செல்லும் ஏற்றுக் கொள்ளல் போன்றன உறுதி செய்யப்பட்டுள்ளன. வங்கியின் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வரிக்கு முந்திய இலாபம் சுமார் இரண்டு மடங்காக அதிகரித்து ரூ. 2.3 பில்லியனாக பதிவாகியிருந்தது. 2022 ஆம் ஆண்டில் பதிவாகியிருந்த ரூ. 1.2 பில்லியனிலிருந்து சுமார் 92% வருடாந்த அதிகரிப்பை பெற்றிருந்தது. 2023 ஆம் ஆண்டுக்கான வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 1 பில்லியன் எனும் பெறுமதியை கடந்து ரூ. 1.4 பில்லியனாக பதிவாகியிருந்தது. 2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 0.8 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 76% வருடாந்த அதிகரிப்பாகும். பிரதான வியாபாரத்தில் உறுதியான வளர்ச்சியுடன், வங்கியின் நிதிசார் வருமானம் ரூ. 17.2 பில்லியனாக உயர்ந்திருந்தது. முன்னைய ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 12.1 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 42% அதிகரிப்பாகும். ஆரோக்கியமான நிதியளிப்பு எல்லைப் பெறுமதியான 4.3% ஐ வங்கி பேணியிருந்ததுடன், தேசிய நிதியளிப்பு வருமானமாக ரூ. 6.5 பில்லியனை வங்கி பதிவு செய்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 4.8 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 36% அதிகரிப்பாகும்.

கட்டண அடிப்படையிலான வருமானமும் 24% வளர்ச்சியை பதிவு செய்து ரூ. 931 மில்லியனாக பதிவாகியிருந்தது. இதில், எமது பெறுமதி வாய்ந்த வியாபார வங்கியியல் வாடிக்கையாளர்களால் உருவாக்கப்பட்ட வர்த்தகங்கள், டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களில் அதிகரிப்பு மற்றும் இதர பெறுமதி சேர் சேவைகள் போன்றன பங்களிப்பு வழங்கியிருந்தன. உயர் தேறிய வர்த்தக வருமானம் மற்றும் இதர வருமதிகளின் பங்களிப்புடன், வங்கியின் மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூ. 9.2 பில்லியனாக உயர்ந்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 6.4 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 45% வளர்ச்சியாகும்.

சந்தை சூழ்நிலைகள், வங்கியின் முற்கொடுப்பனவு பிரிவு மற்றும் உயர் கடன் இருப்புகளை சீராக பேணுவதற்கான தேவை போன்றவற்றை கவனத்தில் கொண்டு ஆண்டின் மதிப்பிறக்க கட்டணங்கள் ரூ. 2.1 பில்லியனாக உயர்ந்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் ரூ. 1.6 பில்லியனாக காணப்பட்டது. இது 29% அதிகரிப்பாகும். மதிப்பிறக்க கட்டணங்களில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், தேறிய தொழிற்பாட்டு வருமானம் குறிப்பிடத்தக்க வகையில் முன்னைய ஆண்டில் பதிவாகியிருந்த ரூ. 4.7 பில்லியனிலிருந்து 50% அதிகரித்து ரூ. 7.1 பில்லியனாக உயர்ந்திருந்தது.

# Huawei Cloud மற்றும் Orel IT இணைந்து Orel Cloud இல் Enadoc தீர்வு அறிமுகம்



Huawei Cloud மற்றும் Orel IT ஆகியன தமக்கு இடையேயான ஒத்துழைப்பின் மூலம், ஒரு அதிநவீன ஆவண முகாமைத்துவ தீர்வான Enadoc இனை Orel Cloud இல் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளன. கொழும்பு போர்ட் சிட்டியில் இடம்பெற்ற இந்த நிகழ்வானது, Orel Cloud வாடிக்கையாளர்களுக்கு மென்பொருளை சேவையாக (Software as a Service SaaS) தங்கு தடையற்ற வகையில் பெறும் தளமாக வழங்குவதற்கான ஒரு முக்கிய படியாக அமைந்தது. இந்த வெளியீட்டு விழாவில் தொழில்துறை தலைவர்கள், தொழில்நுட்ப ஆர்வலர்கள், தனியார் மற்றும் அரச துறையைச் சேர்ந்த முக்கிய பங்குதாரர்கள் உள்ளிட்ட பல்வேறுபட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

டிஜிட்டல் யுகத்தில் வணிக நிறுவனங்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வலுவான SaaS தளத்தை வழங்குவதற்கான Enadoc மற்றும் Orel Cloud இன் உறுதிப்பாட்டை இந்த வெளியீட்டு நிகழ்வு கோடிட்டுக் காட்டுகிறது.

நிகழ்வின் பிரதான உரையை நிகழ்த்திய, Enadoc இன் பிரதம நிறைவேற்று அதிகாரி வசந்த வீரகோன், Orel Cloud இல் Enadoc இன் திறன்கள் மற்றும் நன்மைகள் பற்றி குறிப்பிட்டார், "பயனர்களுக்கு தடையற்ற ஆவண முகாமைத்துவ செயன்முறையை Enadoc வழங்குகிறது. பாதுகாப்பு, இலகுவான அணுகல், செயற்றிறன் ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம், நிறுவனங்கள் தமது தரவுகளை நிர்வகிக்கும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்." என்றார்.

# நாட்டில் நிலைபேறான எதிர்காலத்திற்கான பாதையை வகுக்கும் Adani Green Energy

பூநகரி காற்றாலை மின்சக்தி திட்டத்துடன் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் *Adani Green Energy Sri Lanka* பசுமையான நாளையை நோக்கிய ஒரு சிறந்த முன்னேற்றத்திற்காக, *Adani Green Energy (Sri Lanka) Limited* அதன் 355 மில்லியன் டொலர் முதலீட்டுடன் கூடிய முக்கிய திட்டமான, இலங்கையின் அழகிய வட மாகாணத்தின், 234MW பூநகரி காற்றாலை மின்சக்தி திட்டத்திற்கு, இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகார சபை (SLSEA) தனது அனுமதியை வழங்கியுள்ளது.

இந்த முக்கிய திட்டமானது, இலங்கையின் மிகப்பெரிய ஒரே அமைவிடத்தில் அமையும் காற்றாலை மின்சக்தி திட்டமாக அமைவதோடு மட்டுமல்லாமல், மின்சக்தி நெருக்கடி, பொருளாதார, சூழல் நிலைபேறான தன்மை போன்ற முக்கியமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கான புதிய சகாப்தத்தை நோக்கியதாக அமையவுள்ளது.

இந்த 355 மில்லியன் டொலர் முதலீட்டுடன் கூடிய, 234MW, பூநகரி காற்றாலை மின்சக்தி திட்டமானது, *Adani Green Energy* நிறுவனத்தின், நிலைபேறான தீர்வுகளை வழங்குவதற்கான உறுதியான அர்ப்பணிப்புக்கு சான்றாக அமைகிறது.

இந்த மகத்தான திட்டமானது, ஒரே இடத்தில் அமையப் பெறும் இலங்கையின் மிகப்பெரிய காற்றாலை மின்சக்தி திட்டமாக, அதன் அந்தஸ்தை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல், வலுசக்தி பாதுகாப்பு, பொருளாதார மறுசீரமைப்பு, சூழல் பாதுகாப்பு போன்ற முக்கியமான பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்கின்ற, நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக அமைகிறது.

# மக்கள் வங்கி பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டுகிறது



சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் வகையில், இலங்கையின் வங்கித் துறையில் முன்னணி நிறுவனமான மக்கள் வங்கி, நல்விளைவு மிக்க முயற்சிகள் மூலம் பெண்களுக்கு வலுவூட்டலுக்கான தனது அர்ப்பணிப்பைப் பெருமையுடன் அறிவித்துள்ளது.

*Good Market* உடனான மூலோபாய ஒத்துழைப்புடன், மக்கள் வங்கி அண்மையில் கொழும்பு 05 இல் உள்ள மக்கள் வங்கி பணியாளர்கள் பயிற்சிக் கல்லூரியில் பெண் தொழில் முயற்சியாளருக்கான விசேட பயிற்சி நிகழ்வை நடத்தியது. இந்த முயற்சியின் கீழ், மேல் மாகாணத்தைச் சேர்ந்த 30 பங்கேற்பாளர்கள் கொண்ட குழுவில் இருந்து 12 தொழில்முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

*Good Market* நிறுவனத்தின் இணை ஸ்தாபகர் அச்சலா சமரதிவாகரவினால் பயிற்சி நடத்தப்பட்டது.

*Good Market* இன் தரத் தேவைகளுடன் அந்தந்த தொழில் முயற்சிகளை சீரமைப்பதில் கவனம் செலுத்தி, அந்த வணிகங்களுக்கு உறுதியான அத்திவாரத்தை உறுதி செய்வதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

சமூக தொழில்முயற்சியாண்மை, நெறிமுறை வழுவாத நடைமுறைகள் மற்றும் நிலைபேண்தகு அபிவிருத்தி ஆகியவற்றில் சமூகத்தை ஆதரிக்கும் *Good Market*, இலங்கை தொழில்முயற்சியாளர்களுடன் நெருக்கமாக ஒத்துழைத்து செயல்பட்டுவருகிறது. அவர்களின் விரிவான வணிக தொடக்க முயற்சிகளுக்கு இடமளிக்கும் திட்டம் வணிகங்களை நிலைபேண்தகு முயற்சிகள் மற்றும் பயனுள்ள வர்த்தகநாம பிரபலப்படுத்தல் மூலோபாயங்களுக்கான கருவிகளுடன் பலப்படுத்துகிறது.

இந்த ஆண்டு மக்கள் வங்கியின் வனிதா வாசனா நிகழ்ச்சித் திட்டம், பெண் தொழில்முயற்சியாளர் கோட்பாடுகளுடன் இணைந்து, பெண்களுக்கு வலுவூட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

துணைபோகும் சூழலை வளர்ப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பை வலியுறுத்தும் வகையில், சிரேஷ்ட நிர்வாக முகாமைத்துவத்தில் பெண்களின் குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவத்தை மக்கள் வங்கி எடுத்துக் காட்டுகிறது. வர்த்தக உலகில் பெண்களுக்கு எதிராகவுள்ள எந்தவொரு இரும்புத்திரையையும் தகர்ப்பதற்கான உறுதியான முயற்சியை இது காண்பிக்கிறது.

தலைமைத்துவத்தில் பாலின சமத்துவத்திற்கு அப்பால், மக்கள் வங்கியிலுள்ள பெண் பணியாளர்கள் மற்றும் அது சேவையை வழங்கும் சமூகங்களின் நலனை உறுதிசெய்தவாறு, தொழில் மேம்பாடு, பெண்களின் ஆரோக்கியம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுடன் பெண்களின் நலன் மீதான அதன் அர்ப்பணிப்பை மக்கள் வங்கி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

# 18ஆவது வருடமாக தொலைக்காட்சி சந்தையில் முதலிடத்தில் திகழும் Samsung Electronics

Samsung Electronics ஆனது சர்வதேச தொலைக்காட்சி சந்தையில் அதன் தலைமை ஸ்தானத்தினை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது, ஆம், இத்தொழில்துறையின் உச்சியில் 18 வருடமாகத் தனது ஆட்சியினைப் பாதுகாத்து வந்திருக்கின்றது.

சந்தை ஆராய்ச்சி நிறுவனமான Omdia இன் கூற்றுப்படி, Samsung ஆனது 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய தொலைக்காட்சிச் சந்தையில் 30.1% பங்கினைக் கைப்பற்றியது, இது 2006 முதல் தொழில்துறையின் தலைவராக அதன் நிலையினை உறுதிப்படுத்தியுள்ளது. Samsung நிறுவனம் ஆனது அதன் மேம்பட்ட QLED மற்றும் OLED Model களால் இயக்கப்படும் Premium மற்றும் அகண்ட திரை தொலைக்காட்சி பிரிவுகள் தொடர்பாக சந்தைத் திட்டமிடலுக்கு மிகுந்த முக்கியத்துவத்தினை அளித்ததன் மூலமாக இச்சாதனையானது எட்டப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, சமீபத்திய Neo QLED வடிவமைப்புகள் உட்பட Samsung இன் QLED TV தொடரில், ஒட்டுமொத்த விற்பனையில் 40 Million Unit களை கடந்துள்ளது. 2023 ஆம் வருடத்தில் மட்டுமே, QLED வரிசையில் 8.31 Million Unit விற்பனையினைப் பதிவு செய்துள்ளது.

# 25 வருட பூர்த்தியைக் கொண்டாடும் Zesta Tea



சன்ஷைன் கன்ஸ்யூமர் லங்காவின் கீழ் நன்கு அறியப்பட்ட வர்த்தக நாமமான Zesta Tea, நாட்டின் தேனீர் பிரியர்களுக்கு முத்திரையிடப்பட்ட, உயர் தர மற்றும் ஏற்றுமதி செய்யக்கூடிய தேயிலையை அறிமுகப்படுத்திய இலங்கையின் முதல் வர்த்தக நாமம், தரம், சுவை மற்றும் பாரம்பரியத்தை நினைவூட்டும் வகையில் தனது 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. இலங்கை தேயிலை தொழிலில் நிகரற்ற மேன்மை சமீபத்தில் கொண்டாடப்பட்டது. Zesta பிராண்டின் வரலாற்றில் ஒரு மைல்கல்லைக் குறிக்கும் வகையில் ஜனவரி 17, 2024 அன்று Zesta இன் ஊழியர்கள் மற்றும் Sunshine Holdings இன் சிரேஷ்ட நிர்வாகத்தின் பங்கேற்புடன் கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றது.

புத்தாக்கம் மற்றும் அதிநவீனத்துடன் உயர்தர தேயிலையை இலங்கை சந்தைக்கு வழங்குவதற்கான நற்பெயருடன், Zesta 1998 ஆம் ஆண்டு முதல் தடவையாக இலங்கையர்களுக்கு 100% Broken Orange Pekoe Fannings (BOPF) தனித்துவமான கலவையை அறிமுகப்படுத்தியது, இது சர்வதேச சந்தைக்கு மாத்திரமே சிறந்த தேநீர் என்ற கருத்திற்கு சவாலை ஏற்படுத்தியது. பாரம்பரிய அணுகுமுறைகளில் இருந்து விலகி, துணிச்சலான புதிய உத்திகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் இதயங்களையும் மனதையும் நெருங்கி வருவதன் மூலம், இலங்கையர்களுக்கு மிக உயர்ந்த தரமான தேயிலையை வழங்குவதில் Zesta இன் வர்த்தக நாம அர்ப்பணிப்பு, அதை பிரபலமான வீட்டுப் பெயராக மாற்றியுள்ளது.

இந்த தனித்துவமான நிகழ்வில் கருத்து தெரிவித்த சன்ஷைன் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷ்யாம் சதாசிவம் கூறியதாவது: “இருபத்தைந்து ஆண்டுகளின் சிறப்பைக் கொண்டாடும் இந்த வேளையில், இந்த வெற்றிக்கு பங்களித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். 1998 ஆம் ஆண்டு Zesta பிராண்டின் அறிமுகத்திற்கு முன்னோடியாக இருந்த மற்றும் Zesta பிராண்டை புதிய உயரத்திற்கு தொடர்ந்து வழிநடத்திய விஷ் கோவிந்தசாமியின் ஈடு இணையற்ற தலைமைத்துவம் மற்றும் எங்கள் ஆர்வமுள்ள குழு மற்றும் விசுவாசமான வாடிக்கையாளர்களின் தளராத ஆதரவின் காரணமாக இந்த மைல்கல்லை எங்களால் எட்ட முடிந்தது." என அவர் தெரிவித்தார்.

“தொடர்ச்சியான புத்தாக்கம் மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மூலம் இலங்கையில் தேயிலை தொழிற்துறையை மேம்படுத்துவதை இலக்காக கொண்டு Zesta இன் எதிர்காலத்தை எதிர்பார்க்கிறோம். Zesta பிராண்டின் அடுத்த அத்தியாயத்தை மாற்றுவதற்கும், உள்ளூர் மற்றும் சர்வதேச தேயிலை ஆர்வலர்களுக்கு அதிக திருப்தியைக் கொண்டுவருவதற்கும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.” என அவர் மேலும் தெரிவித்தார்.

Zesta பிராண்ட் கடந்த 25 ஆண்டுகளில் பல குறிப்பிடத்தக்க சாதனைகளை அடைந்துள்ளது. அதன் BOPF இன் விதிவிலக்கான தரத்தை சிறப்பித்துக் காட்டும் வகையில், Zesta அதிக விற்பனையைப் பதிவுசெய்து, பல ஆண்டுகளாக அதிக வாடிக்கையாளர்களை ஈர்க்க முடிந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டில், Zesta உலகளாவிய ShangriLa ஹோட்டல் சங்கிலியுடன் கூட்டு சேர்ந்தது மற்றும் 2022 இல், அதன் Wellness Range மற்றும் Zesta Red ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாறிவரும் நுகர்வோர் ரசனைகளை பூர்த்தி செய்யும் வகையில் அதன் தயாரிப்புகளை விரிவுபடுத்தியது.

இந்த புத்தாக்கங்களின் மூலம் உயர்ந்த தரத்திலான தேயிலை நுகர்வோருக்கு அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான பிராண்டின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது மற்றும் தொழில்துறை போக்குகளுக்கு முன்னால் இருக்க Zestaவின் திறனையும் அர்ப்பணிப்பையும் நிரூபிக்கிறது.

# காதலர் தினத்தில் Valentine Day Hashtag மூலம் படைப்பாற்றலை ஊக்குவித்த TikTok



மன்மதனின் அம்பானது குறி வைத்ததினைப் போன்று, காதலர் தினத்தினை *Digital* முறையில் கொண்டாடுவதில் *TikTok* ஆனது முன்னணியில் திகழ்கின்றது. காதல் ஜோடிகள் *Dating* செய்ய உகந்த இடம் எதுவெனத் தேட, காதலர்கள் பயணத்தினை மேற்கொள்ளத் திட்டமிடுவதோ அல்லது சரியான ஆடையைத் தேர்ந்தெடுப்பதோ இது போன்ற அம்சங்களினைப் பாவனையாளர்கள் தளத்தில் ஊக்கமளிக்கும் *Content* களின் மூலம் சொல்லப்படும் விடயத்தில் இருந்து எளிதாகக் கண்டறியலாம்.

*TikTok* ஆனது கவர்ச்சியின் ஓர் மையமாக அதன் பல்வேறு வித்தியாசப்பட்ட உள்ளடக்கங்களுடன் கவர்ந்திழுக்கின்றது, சிறிய அளவிலான வீடியோக்கள் ஆனால் பல்வேறுபட்ட விடயங்கள் என்பனவற்றினை அள்ளி வழங்குகின்றது.

இம்முறை காதலர் தினத்தன்று, *TikTok* ஐ உருவாக்கியவர்கள் தமது அன்பினை அதன் அனைத்து வடிவங்களிலும் ஏற்றுக்கொண்டு, நினைவுகூருகின்றனர். ஒவ்வொரு பாவனையாளரும் தமது தனித்துவமான சிறப்பம்சங்களினை இனங்கண்டுகொள்ள உதவுகின்றது, அது மட்டும் அல்லாது ஒவ்வொரு படைப்பாளரும் தத்தமது பார்வையாளர்களுடன் இணையவும் இது உதவுகின்றது.

***Eric & Manisha Heinrichs (@ericandmani)***


*Content* களை உருவாக்கும் ஒரு தம்பதிகளாக, எமது பயணமானது உண்மையில் விளையாட்டாக கிண்டல் செய்வதன் மூலம் தொடங்கியது. நாம் ஒருவருக்கொருவர் இருக்கக்கூடிய வினோதமான பழக்கவழக்கங்கள் அல்லது குணங்களை நன்கு கவனித்து, அவை எவ்வளவு தொடர்புடையவை என்பதை உணர்ந்தோம். இவ் அவதானிப்புகள், நாம் *Camera* வில் எமது அன்றாட நடவடிக்கைகளினை நாடகமாக்க முடியும் என்று எமது யோசனைகளைத் தூண்டின. அதனால்தான் எமது *Video* களில் எப்போதும் நிஜ வாழ்க்கையில் நடக்கும் உரையாடல்கள், எண்ணங்கள் அல்லது நிகழ்வுகளிலிருந்து தோற்றம் பெற்றன. இரண்டு வருடங்களுக்கு முன்பாக *TikTok* கின் ஆரம்ப நாட்களில் இருந்து நமது *Content* கள் எவ்வாறு உருவாகியுள்ளன என்பதனைப் பார்க்கும் போது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நீண்ட காலமாக, நாம் தனித்தனி பக்கங்களை வைத்திருந்தோம், ஆனால் சில மாதங்களுக்கு முன்பு, *'Eric'* ஐ *'Eric & Mani.'* என்று இணைப்பதன் மூலம் ஒரு மைல்கல்லை எட்டினோம். அப்போது தான் எங்கள் பக்கத்தில் எங்கள் ஒத்துழைப்பு வளர்ந்து வருவதை நாம் உணர்ந்தோம்.

***மனைவியுடன் மேற்கொண்ட பயணம் (@travelwithwife.lk)***

*Content* களினை உருவாக்குவதற்கான எமது பயணம் *You tube* இல் தொடங்கியது, அங்கு நாம் எமது படைப்பு முயற்சிகளினை கதைகள் மற்றும் அனுபவங்கள் வாயிலாகப் பகிர்ந்து கொள்ள ஆரம்பிதோம். இருப்பினும், *TikTok* என்ற ஒரு விடயம் இருப்பதனைக் கண்டுபிடித்தபோது, அதன்பால் ஈர்க்கப்பட்டோம், நாம் பார்க்கும் விதமே மாறியது, அதிக பயண உள்ளடக்கங்களினைச் செல்ல ஆரம்பிதோம். காதலர் தினத்தில் வருவாய்க்கு ஏற்றபடி அத்தினத்தினைக் கழிக்க விரும்புபவர்களுக்கு, *Ella* எனும் இடத்திற்கு புகையிரதப் பயணத்தினைப் பரிந்துரைக்கின்றோம். இந்த புகையிரதமானது *Kandy* க்கும் *Ella* வுக்கும் இடையே உள்ள அற்புதமான தேயிலைத் தோட்டங்களின் ஊடாகப் பயணிக்கின்றது. நீங்கள் உணவருந்த வேண்டுமா. ஆம் , காதலர் தினத்திற்காக, இருக்கவே இருக்கின்றது *Nelum Kuluna* இல் உள்ள *Blue Orbit Restaurant*, அதனை நாம் மிகவும் பரிந்துரைக்கின்றோம்.

அற்புதமான சூரிய அஸ்தமனம் மற்றும் கொழும்பின் பரந்த காட்சிகள் என மறக்க முடியாத ஒரு மாலை வேளைக்கு ஓர் சிறந்த சூழ்நிலையை உருவாக்குகின்றன, அதுமட்டும் அல்லாது, இது இருவருக்கு ஒரு காதல் இரவு உணவுக்கு *Blue Orbit Restaurant* ஆனது வழிவகுக்கின்றது.

# ஹரின் டி.எஸ். விஜயரத்னவை பணிப்பாளர் சபைக்கு நியமித்துள்ள Ceylon Tobacco



*Ceylon Tobacco Company PLC (CTC)* பெப்ரவரி 01, 2024 புகழ்பெற்ற கூட்டாண்மைத் தலைவர் ஹரின் டி.எஸ். விஜயரத்னவை அதன் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக நியமித்துள்ளது. இந்த நியமனம் மூலம், *CTC* பணிப்பாளர்கள் சபையில் தலைவர் சுரேஷ் ஷா, முகாமைத்துவப் பணிப்பாளர் மோனிஷா ஆபிரகாம், குஷான் டி அல்விஸ், கேரி டாரன்ட், ருமனா ரஹ்மான், ஸ்டுவர்ட் கிட், தௌஹிட் அக்பர் மற்றும் ஹரின் டி எஸ் விஜயரத்ன ஆகியோர் அடங்குவர்.

விஜேயரத்ன இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இணை அங்கத்தவர் மற்றும் *UK*இன் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினராக உள்ளார். *Bahrain Investcorp* வங்கி, *Grindlays Bahrain* வங்கி, *Ernst & Young Bahrain* மற்றும் *Ernst & Young Sri Lanka* ஆகிய நிறுவனங்களில் பெறப்பட்ட வெளிப்பாட்டின் மூலம் பொது நிர்வாகம், நிதி முகாமைத்துவம் மற்றும் தணிக்கை ஆகியவற்றில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளவர்.

அவர் *DFCC* வங்கி மற்றும் *Trans Asia Hotels PLC* இன் பணிப்பாளராகவும் இந்த நிறுவனங்களின் தணிக்கைக் குழுக்களின் தலைவராகவும் உள்ளார். *MAS* ஹோல்டிங்ஸின் தணிக்கைக் குழுவின் தலைவராகவும் அவர் செயல்படுகிறார்.

இலங்கை *Nanotechnology (Pvt) Limited*இன் *(SLINTEC)* பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியையும் அவர் வகித்துள்ளார் மற்றும் *Union Assurance PLC*இன் சுயாதீன பணிப்பாளர், அதன் சபை தணிக்கை மற்றும் இணக்கக் குழுவின் தலைவராகவும் செயல்பட்டார்.

மேலும், அவர் *Gamini Corea Trust*இன் பணிப்பாளராக பணியாற்றுகிறார் மற்றும் *SLINTEC Endowment Trust Fund*இன் அறங்காவலராக உள்ளார். அவர் *Avastha Financial* ஆலோசனை சேவைகளின் நிறுவுனர்/ உரிமையாளராகவும், மனநல ஆலோசனைக் குழுவான *Kalyana*வின் இணை நிறுவனராகவும் உள்ளார்.

விஜயரத்னவின் அனுபவம் மற்றும் புத்திசாலித்தனத்துடன் *CTC* இன் கூட்டாண்மை நிர்வாகம், கணக்காய்வு அளவுகோல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை வலுப்படுத்துவதை நிறுவனமும் நிர்வாகமும் அன்புடன் வரவேற்கிறது.

118 வருட வரலாற்றைக் கொண்ட *CTC* கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள மிகவும் பெறுமதிமிக்க நிறுவனங்களில் ஒன்றாகும். *CTC* இலங்கையில் தனது பயணத்தின் ஒரு பகுதியாக, அதன் உயர்மட்ட நிலையை தொடர்ந்து பலப்படுத்துவதுடன் அனைத்து பங்குதாரர்களுக்கும் மேலும் வளர்ச்சியை ஏற்படுத்தும்.

# பிரான்ஸ் கால்பந்து நட்சத்திரம் போக்பாவுக்கு 4 ஆண்டு தடை



பிரான்ஸ்; கால்பந்து வீரர் போல் போக்பாவுக்கு கால்பந்து விளையாட 4 ஆண்டுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியின் ஊக்கமருந்து எதிர்ப்பு மன்றம் நடத்திய டெஸ்டோஸ்டிரோன் பரிசோதனையில் அவர் உடலில் ஊக்கமருந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

30 வயது போக்பா இனிமேல் 2027–2028 கால்பந்து பருவத்தில்தான் விளையாட முடியும். அப்போது அவருக்கு வயது 34 ஆகிவிடும்.

கால்பந்து வாழ்க்கை தம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டதாக போக்பா கூறினார். தாம் வருத்தமாகவும் மனமுடைந்தும் இருப்பதாக அவர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் குறிப்பிட்டார்.

மன்றத்தின் முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் மருத்துவர் ஒருவர் கொடுத்த துணைச் சத்துப்பொருளை உட்கொண்டதால் டெஸ்டோஸ்டிரோன் வந்ததாக போக்பாவின் பிரதிநிதிகள் கூறினர்.

விளையாட்டுத் திறனை மேம்படுத்தக்கூடிய எந்த மருந்தையும் வேண்டுமென்றே உட்கொள்ளவில்லை என்று போக்பா குறிப்பிட்டார்.

இந்தத் தடை போக்பா ஆடும் சீரி ஏ லீக்கின் முக்கிய அணிகளில் ஒன்றான ஜுவான்டஸுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. 2018 உலகக் கிண்ண கால்பந்தை வென்ற பிரான்ஸ் அணியில் போக்பா இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## லெஜன்ட்ஸ் சுப்பர் லீக் கால்பந்து தொடர் இன்று


புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் லெஜன்ட்ஸ் கழக ஸ்தாபகர் முஹம்மது யமீன் முயற்சியில் 'லெஜன்ட்ஸ் சுப்பர் லீக்' கால்பந்தாட்ட தொடர் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மொத்தம் எட்டு அணிகள் கலந்து கொள்ளும் இந்தத் தொடரில் புத்தளத்தை சேர்ந்த இரண்டு அணிகள் மற்றும் புத்தளம் மாவட்டத்துக்கு வெளியில் உள்ள ஆறு அணிகள் பங்குபற்கவுள்ளன.

புத்தளத்தில் இருந்து லிவர்பூல் மற்றும் நிவ் ஸ்டார்ஸ் கழகங்கள் பங்கேற்கின்றன. வெளி மாவட்ட அணிகளாக ட்ரின்கோ எப்.சி., கார்டியன் எப்.சி., எவர்க்ரீன் கழகம், லைட் இன் பென்ட்ரி கழகம், கெடேரியன் கழகம், இலவன் ஸ்டார் கழகம் விளையாடுகின்றன.

## சினமூட்டும் சைகைகளை காண்பித்த ரொனால்டோவுக்கு போட்டித் தடை



சவூதி அரேபிய கால்பந்து சம்மேளனம் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு ஓர் ஆட்டத்தில் விளையாடத் தடை விதித்துள்ளது. கடந்த வாரம் நடந்த ஆட்டமொன்றின்போது மைதானத்தில் அவர் சினமூட்டும் சைகையைச் செய்ததாக சம்மேளனம் கூறியது.

அந்தச் சைகைக்காக அல் நாசர் அணி வீரரான ரொனால்டோவுக்கு 30,000 ரியால் (8,000 டொலர்) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஆட்டத் தடை, அபராதம் ஆகியவற்றை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்ய முடியாது என்றும் சம்மேளனம் கூறியுள்ளது.

அல்ஷபாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ரொனால்டோவின் அணி 3–2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பின்னர், அவரது பரம வைரி லயனல் மெஸ்ஸியின் பெயரை உரக்கக் கத்திக்கொண்டிருந்த ரசிகர்களை நோக்கி ரொனால்டோ மீண்டும் மீண்டும் சினமூட்டும் சைகையைச் செய்ததாகக் கூறப்படுகிறது.

அதைக் காட்டும் வீடியோ சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவியது. அது சவூதி அரேபிய கால்பந்துச் சம்மேளனத்தின் கவனத்துக்கும் சென்றது.

இதற்கிடையே ரொனால்டோ, வெற்றியைக் கொண்டாடவே அந்தச் சைகையைச் செய்ததாகக் கூறினார் என்று சவூதியிலுள்ள விளையாட்டுச் செய்தித்தாள் அல்ரியாடியா தெரிவித்தது.

அதில் தவறேதும் இல்லை என்றும் ஐரோப்பாவில் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான் என்றும் அவர் விளக்கம் தந்தார்.

எனினும் இந்தத் தடையால் ரொனால்டோ நேற்று முன்தினம் (29) நடைபெற்ற அல் நாசர் – அல் ஹஸ்ம் இடையிலான போட்டியில் பங்கேற்கவில்லை. இந்த போட்டி 4–4 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

## பங்களாதேஷில் கட்டடத்தில் தீ பரவி 44 பேர் உயிரிழப்பு



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஏழு மாடி கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ சம்பவத்தில் குறைந்தது 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு பத்து மணி அளவில் உணவகம் ஒன்றில் ஆரம்பித்த தீ மேல் மாடிகளுக்கு வேகமாக பரவியதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதன்போது எழுபது பேர் வரை மீட்கப்பட்டிருப்பதோடு பலரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு மணி நேரத்திற்கு பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக தீயணைப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்திருப்பதோடு தீ ஏற்பட்டதற்கான காரணம் பற்றி விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உணவகத்தில் எரிவாயு சிலிண்டர் வெடித்தே தீ ஏற்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. அடுக்குமாடி கட்டடத்தில் புடவைக் கடைகள் மற்றும் பாதணி கடைகள் என பல கடைகள் இருந்துள்ளன.

பங்களாதேஷில் வர்த்தக மற்றும் குடியிருப்பு கட்டடங்களில் தீ ஏற்படுவது வழக்கமாக நிகழ்ந்து வருகிறது. மோசமான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை முறையாக பின்பற்றாமை இதற்கு காரணம் என குறைகூறப்படுகிறது.

## லீப் ஆண்டின் செய்தித்தாள் 4 ஆண்டுகளில் வெளியானது



உலகில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியாகும் செய்தித்தாள் லீப் தினமான பெப்ரவரி 29 ஆம் திகதி விற்பனைக்கு வந்தது.

பிரான்ஸின் 'லா போகிடு சப்பியுர்' செய்தித்தாள் 20 பக்கங்களைக் கொண்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு முதல்முறை வெளியிடப்பட்டபோதும் பெப்ரவரி 29 ஆம் திகதி மாத்திரம் வெளியிடப்படுவதால் அது தற்போது தனது 20 ஆவது இதழையே வெளியிட்டுள்ளது.

நண்பர்கள் சிலர் விளையாட்டாக அந்த செய்தித் தாளை ஆரம்பித்தனர் என்று பி.பி.சி. செய்தி நிறுவனம் கூறியது.

200,000 பிரதிகள் அச்சிடப்பட்ட முதல் இதழ் விற்றுத் தீர்ந்ததும் முகவர்கள் பலர் தொடர்புகொண்டு மேலும் இதழ்களைக் கேட்டதாக பதிப்பாளர் ஜீன் டி இண்டி குறிப்பிட்டுள்ளார். அப்போது '4 ஆண்டுகளில் தருகிறோம்!' என்று சொல்லிவிட்டதாக அவர் கூறினார். ஒரு கேலிப் பத்திரிகையாக வெளியிடப்படும் இந்த செய்தித்தாளின் இந்த இதழின் பிரதான செய்தி, 'நாம் அனைவரும் அறிவாளிகளாக இருப்போம்' என்ற தலைப்பில் வந்துள்ளது. அதில் செயற்கை நுண்ணறிவினால் பரீட்சைகள் மற்றும் அறிவுசார் சாதனைகள் தேவையற்றதாக மாற்றப்படுவது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஒரு தொடர் கதையும் உள்ளது. எனினும் அந்தக் கதையில் அடுத்த பாகம் 2028 ஆம் ஆண்டு தான் வெளியாகவுள்ளது.

## தொழிலாளர் உடன்படிக்கையில் தாய்வான் –இந்தியா கைச்சாத்து



இந்தியாவுக்கும் தாய்வானுக்கும் இடையிலான நட்புறவில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களின் வெளிப்பாடாக இரு நாடுகளும் தொழிலாளர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இரு நாடுகளதும் பிரதிநிதிகளுக்கு இடையில் நீண்ட காலம் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள இணப்பாட்டின் அடிப்படையில் இந்திய–தைபே சங்கமும் தைபே பொருளாதார மற்றும் கலாசார நிலையமும் இந்தியாவுடனான தொழிலாளர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் தாய்வானில் தொழிலாளர் பற்றாக்குறை காணப்படும் உற்பத்தி துறை, நிர்மாணத்துறை மற்றும் விவசாயத்துறை என்பவற்றில் இந்தியர்கள் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இரு நாடுகளுக்கும இடையிலான வணிக உறவு வலுவடையவும் மக்களுக்கு இடையிலான உறவு மேம்பாடு அடையவும் தாய்வானில் இந்திய சமூகத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்கவும் இவ் உடன்படிக்கை வழிவகுக்கும்.

# சர்வதேச செய்திகள்

## காசாவில் இஸ்ரேலிய படுகொலைக்கு சர்வதேச அளவில் கடும் கண்டனம்

### போர் நிறுத்தப் பேச்சிலும் சிக்கல்



உதவி பெறுவதற்கு கூடியவர்கள் மீது இஸ்ரேலிய துருப்புகள் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் போர் நிறுத்த பேச்சுவார்த்தையை சிக்கலாக்கி இருப்பதாக குறிப்பிட்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், முன்னர் கூறியது போல் வரும் திங்கட்கிழமை போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது சாத்தியம் இல்லாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

காசா நகரின் கடற்கரையோர வீதியான அல் ரஷீதில் உள்ள நபுல்சி சுற்றுவட்டப்பாதைக்கு அருகில் கடந்த வியாழக்கிழமை உணவு லொறிகளுக்காக காத்திருந்தவர்கள் மீதே இஸ்ரேலிய படையினர் சூடு நடத்தியுள்ளனர். இதில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதோடு குறைந்தது 750 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்திற்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் வெளியாகி வரும் நிலையில், இந்த சம்பவம் குறித்து கூறப்படும் கூற்றை அமெரிக்கா சரிபார்த்து வருவதாக பைடன் தெரிவித்துள்ளார்.

உணவு உதவிக்காக முண்டியடித்த பலஸ்தீனர்கள் மீதே இஸ்ரேலியப் படை சூடு நடத்தியதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பிரான்ஸ் குறிப்பிட்டுள்ளது. 'உணவை பெறுவதற்கு முயற்சிக்கும் பொதுமக்களுக்கு எதிராக இஸ்ரேலிய படைகள் சூடு நடத்தியது நியாயப்படுத்த முடியாதது' என்று பிரான்ஸ் முன்னதாக கண்டித்திருந்தது.

அவசர போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்த இத்தாலி, இந்த துயரமிக்க மரணங்களுக்கு பின் பலஸ்தீன பொதுமக்களை இஸ்ரேல் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுள்ளது.

இந்த சம்பவம் அதிர்ச்சியை தருவதாக கூறியிருக்கும் சீனா, இந்த கொலைகளை கடுமையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளது. இதனைப் பயங்கரமானது என்று வர்ணித்திருக்கும் அவுஸ்திரேலியா இதனை நேரடியாக இஸ்ரேலிய தூதரகத்திற்கு தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த சம்பவத்தை கண்டித்திருக்கும் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ், இந்த மோதலின் மோசமான உயிரிழப்பு எண்ணிக்கை திகைப்பை ஏற்படுத்தி இருப்பதாகவும் தெரிவித்தார். உயிரிழப்புகளைக் கண்டித்த ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார தலைவர் ஜோசப் பொரெல், இது முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

பலஸ்தீன மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை கண்டிப்பதாக குறிப்பிட்டிருக்கும் கொலம்பியா, இஸ்ரேலில் இருந்து ஆயுதங்கள் வாங்குவதையும் இடைநிறுத்தியுள்ளது. துருக்கி, கட்டார் நாடுகளும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

#### பாதுகாப்புச் சபைக்கு முட்டுக்கட்டை

இந்த படுகொலை சம்பவத்தை அடுத்து ஐ.நா பாதுகாப்புச் சபை நேற்று முன்தினம் நியூயோர்க்கில் அவசர கூட்டத்தை நடத்தியபோதும், இந்தத் தாக்குதலை கண்டிக்கும் அறிக்கை ஒன்றை வெளியிடுவதை வீட்டோ அதிகாரம் பெற்ற அமெரிக்கா முடக்கியுள்ளது.

இந்த அவசர கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நாவுக்கான பலஸ்தீன தூதுவர் ரியாத் மன்சூர், இந்த அறிக்கைக்கு 15 உறுப்பு நாடுகளில் 14 நாடுகள் ஆதரவு வழங்கியதாக குறிப்பிட்டார்.

அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்த அல்ஜீரியாவால் வரையப்பட்ட இந்த அறிக்கையில், 'ஆழ்ந்த கவலை' வெளிப்படுத்தப்பட்டிருந்ததோடு 'இஸ்ரேல் படைகளின் துப்பாக்கிச் சூடு காரணமாக' இந்த நிலைமை ஏற்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த அறிக்கைக்கு அமெரிக்கா ஆதரவை வெளியிடவில்லை என்பதோடு, அறிக்கை ஒன்றை பெறும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக ஐ.நாவுக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் ரொபட் வூட் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் 10 அல்லது 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்திற்கு முன்னர் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலேயே இந்த



படுகொலை சம்பவம் நிகழ்ந்துள்ளது.

காசாவில் பிடிக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான கைதிகள் பரிமாற்றம் மற்றும் போர் நிறுத்தம் ஒன்றை எதிர்வரும் திங்கட்கிழமை எட்ட முடியும் என்று சில நாட்களுக்கு முன் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தொடர்ந்தும் எதிர்பார்ப்பு நீடித்து வருவதாக பைடன் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். 'பிராந்தியத்தில் இருப்பவர்களுடன் நான் தொலைபேசியில் பேசியிருந்தேன். பெரும்பாலும் திங்கட்கிழமை இருக்காது ஆனால் நான் எதிர்பார்ப்புடன் இருக்கிறேன்' என்றார்.

பைடன் கடந்த வியாழக்கிழமை கட்டார் எமீர் ஷெய்க் தமீம் பின் ஹமத் அல்தானி மற்றும் எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசியுடன் போர் நிறுத்த முயற்சிகள் தொடர்பில் பேசியதாக வெள்ளை மாளிகை தெரிவித்தது.

'பணயக்கைதிகளை விடுவிப்பது, காசாவில் குறைந்தபட்சம் ஆறு வாரங்களுக்கு ஒரு உடனடி மற்றும் நீடித்த போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும் என்று தலைவர்கள் சுட்டிக்காட்டினார்கள்' என்று வெள்ளை மாளிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'இவ்வாறான நீண்ட அமைதிக் காலத்தை மேலும் நீண்ட நிலைத்திருக்கும் ஒன்றாக உருவாக்க முடியும் என்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது' என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேலுக்கு அதன் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்க உறுதியான ஆதரவை வழங்கி வருகின்றபோதும், காசாவில் பொதுமக்களின் உயிரிழப்பு அதிகரித்து பாரிய மனிதாபிமான நெருக்கடி ஒன்று உருவாகி இருக்கும் சூழலில் அண்மைக் காலத்தில் போர் நிறுத்த முயற்சியில் தீவிரம் காட்டி வருகிறது.

#### பலஸ்தீன தரப்புகள் மொஸ்கோவில் பேச்சு

கடந்த ஒக்டோபர் 7 ஆம் இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த இந்தப் போரில் இஸ்ரேலியப் படை 147 ஆவது நாளாக நேற்றைய (1) தினத்திலும் காசாவில் கடும் தாக்குதல்களை நடத்தியது.

மத்திய காசாவில் உள்ள அல் புரைஜ் அகதி முகாமில் நேற்றுக் காலை இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். முகாமில் இருக்கும் அல்குரைனாவி குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீதே இஸ்ரேல் தாக்குதல் நடத்தி இருப்பதாக உள்ளூர் மக்களை மேற்கோள் காட்டி பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

மறுபுறம் தெற்கின் மிகப்பெரிய நகரான கான் யூனிஸில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கி இருக்கும் பாடசாலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டு மேலும் 10 பேர் காயமடைந்திருப்பதாக அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய புதிய வான் தாக்குதல்களில் பலரும் காயமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐந்து மாதங்களை தொடும் இந்தப் போரில் காசாவில் உயிரிழந்த பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 30,000ஐ தாண்டி இருப்பதோடு 70 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 70 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

காசா செல்லும் உதவிகள் இஸ்ரேலால் முடக்கப்படும் நிலையில் அங்கு பாரிய மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டிருப்பதோடு குறிப்பாக வடக்கு காசா பஞ்சம் ஒன்றை நெருங்கி இருப்பாக உதவி அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இதேவேளை ஹமாஸ், பத்தா உட்பட பலஸ்தீன தரப்புகள் பங்கேற்கும் பேச்சுவார்த்தை ஒன்று ரஷ்ய அரசின் அனுசரணையில் மொஸ்கோவில் நடைபெற்று வருகிறது. கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்த பேச்சுவார்த்தை இன்று நிறைவடையவுள்ளது. இதில் ஹமாஸ், பத்தா தவிர இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் மேலும் சுமார் பத்து பலஸ்தீன தரப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

'பல்வேறுபட்ட பலஸ்தீன தரப்புகள் அரசியல் ரீதியில் ஐக்கியப்படுவதற்கு உதவுவதே ரஷ்யாவின் நோக்கமாகும்' என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க பிராந்தியத்திற்கான தூதுவர் மிகைல் பொடனோவ் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் போர் உக்கிரம் அடைந்து பலஸ்தீன அதிகாரசபையின் பிரதமர் பதவி விலகியுள்ள சூழலிலேயே மொஸ்கோ சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக காசா போருக்குப் பின்னர் பலஸ்தீனத்தில் புதிய நிர்வாகம் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் அமெரிக்கா மற்றும் தரப்புகள் பேசி வருகின்றன.

கடந்த 2007 தொடக்கம் பலஸ்தீனத்தில் அரசியல் பிளவு நீடித்து வருவதோடு ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பத்தா அமைப்பும் காசாவில் ஹமாஸ் அமைப்பு ஆட்சி நடத்தி வருகின்றன. கடந்த பல ஆண்டுகளில் அரபுத் தலைநகரங்களில் சமரச பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோதும் எதுவும் வெற்றி அளிக்கவில்லை.